www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

17

ஏப்ரல் - ஜூன் 2013

## பொதுவுடைமை அரசியல் பயணத்தில் தோழர் சூடாமணியின் பங்களிப்பு

*சி.கா. செந்திவேல்*

## ஹலால்: வெறுமனே ஒரு சாட்டு
### இலங்கையில் சிங்கள-பௌத்த சகிப்பின்மை

*மோகன்*

## தமிழிலே தொடர்பாடல்:
### இன்று நாம் எதிர்நோக்கும் சில பிரச்சனைகள்

*பேராசிரியர் சி. தில்லைநாதன்*

## ஈழத்து இலக்கியமும் சமூக விடுதலையும்

*தெ.ஞா. மீநிலங்கோ*

## கவிதைகள்:

*ச. சுதாகர், றே பேச்*

படிப்பகம்

# ஆசிரியர் தலையங்கம்

## கண்காணிப்பு அரசு

ஒரு நாடு இன்னொரு நாட்டில் உளவுபார்ப்பதை அறிவோம். அவ்வாறு உளவுபார்க்கப் பகைமை மட்டும் காரணமல்ல. அரசியல், ராணுவ உளவுபார்த்தலை விட வணிக, தொழிற் துறை உளவுபார்த்தல்களும் அரசின் உதவியுடனோ இல்லாமலோ நடக்கின்றன. ஒரு வல்லரசோ ஏகபோகக் கம்பனியோ தனக்குப் பாதகமான மாற்றங்கள் எங்கு நிகழ்வதையும் விரும்பாது. எனவே, பலவேளைகளில், உளவு, தகவல் சேகரிப்புடன் நிற்பதில்லை. அது ஆட்சிக் கவிழ்ப்பு வரை போகலாம்.

அரசு என்பது அதிகாரத்திலுள்ள ஒரு வர்க்கம் தன் ஆட்சியைப் பாதுகாப்பாகத் தொடர்வதற்கான அடக்குமுறைக் கருவி. எனினும், ஒரு அரசை ஜனநாயக அரசெனக் கூறும்போது, மக்கள் சில விடயங்களை எதிர்பார்க்கின்றனர். வாழ்வாதார உரிமைகட்கும் தனிமனிதப் பாதுகாப்புக்கும் அப்பால், கருத்துச் சுதந்திரமும் தகவல்களைப் பெறுவதற்கான சுதந்திரமும் அரசின் குறுக்கீடற்ற அந்தரங்க வாழ்க்கையும் மக்களின் பொதுவான எதிர்பார்ப்புக்கள். சோஷலிஸ நாடுகளில் அத்தகைய சுதந்திரங்கள் இருந்ததில்லை என்போர் இன்னமும் உள்ளனர். எனினும், அமெரிக்க மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் விக்கிலீக்ஸ் அம்பலமாக்கிய பின்பு அமெரிக்கா எடுத்துவந்துள்ள அதிரடி நடவடிக்கைகள் இன்று அமெரிக்க அரசைப் போற் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் வல்லரசு சமகால வரலாற்றில் இல்லை எனத் தெளிவாக்கியுள்ளன.

அமெரிக்க மனித உரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் பகிரங்கமான பின்பு, குற்றவாளிகளைத் தண்டிப்பதை விடுத்து, மிகுந்த தீவிரத்துடன் விக்கிலீக்ஸ் பொறுப்பாளர் ஜூலியன் அஸாஞ்ஜைத் தண்டிக்க அவரை அமெரிக்காவுக்குக் கடத்த முயன்று, ஈக்குவடோர் நாடு அவருக்குத் தஞ்சம் வழங்கிய நிலையில், ஏமாந்த அமெரிக்கா அவருக்குத் தகவல் வழங்கிய பிரட்லி மனிங் என்ற படைவீரரைக் கைதுசெய்து வதைத்துத் தேசத்துரோகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளது. தான் செய்த எதையும் மனிங் மறுக்கவில்லை. தனது செயல்கள் ஜனநாயக விழுமியங்கட்கும் அமெரிக்க மக்களின் நலனுக்கும் கேடான அரச வஞ்சகத்திற்கெதிரான தேசபக்தியுடைய செயல்களென மனிங்கின் தைரியமாகக் கூறுகிறார்.

மனிங் மீதான வழக்குத் தொடங்கியுள்ள நிலையில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அந்நியர்களின் தொலைபேசி, மின் ஊடக உரையாடல்களைக் ஒட்டுக்கேட்கத் தனக்கு வழங்கப்பட்ட உரிமையை அமெரிக்க அரசு துஷ்பிரயோகித்துள்ளதுடன் அமெரிக்கக் குடிகளின் தொலைபேசி, மின் ஊடக உரையாடல்களின் விவரங்களையும் பெற்று வருகிறதென்பதை லண்டன் கார்டியன் நாளேடு ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியது. சி.ஐ.ஏ.யின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகரான எட்வட் ஸ்னோடன், அமெரிக்கவிலிருந்து வெளியேறி, ஆதாரங்களை வழங்கியதற்கான பொறுப்பை ஏற்றார்.

இச் செய்திகள் சிலரை அதிரவைத்திருக்கலாம். ஆனால், அமெரிக்கா 1950களின் முற்பகுதியில் செனெற்றர் மக்கார்த்தியின் கம்யூனிஸ்ற் வேட்டையைக் கண்ட நாடு. கம்யூனிஸ்ற்றுக்களல்லாத பலரையும் அவ் வெறி பலிகொண்டது. அமெரிக்கா அதினின்று மீண்டு "சனநாயகத்திற்குத்" திரும்பியபோதும், இடதுசாரிகள் இன்னமும் ஓரங்கட்டப்படுகின்றனர். ஏலவே இருந்துவந்த சி.ஐ.ஏ., எவ்.பி.ஐ. ஒட்டுக்கேட்டல்கள் பல சட்டவிரோதமானவை. எனினும் 2001இல் நடந்த 9/11 தாக்குதலின் பின்பு நிறைவேறிய "தேசபக்தச் சட்டம்" அவ்வாறான பல ஒட்டுக்கேட்டல்களையும் வேறும் பல மீறல்களையும் சட்டரீதியாக்கியது. குறிப்பிட்ட சூழல்களில் அமெரிக்கரல்லாதோருக்கு மட்டுமான இவ் அனுமதியைத் தாண்டி, அமெரிக்கக் குடிகளும் மீறல்கட்குட்பட்டுள்ளனர். தனியார் தொலைபேசி உரையாடல்கள் பற்றிய தகவல்களும் மின் ஊடகக் கருத்துப் பரிமாறல்களும் இன்று அமெரிக்க அரசிற்கு எட்டக்கூடியன. நாட்டின் பாதுகாப்பின் பெயரில் இரகசியத்தன்மையான ஒரு கண்காணிப்பு அரசு இயங்கி வருவதையே அஸாஞ்ஜ், மனிங், ஸ்னோடன் ஆகியோர் அம்பலப்படுத்தினர். எனினும், சட்டவிரோதமாய் நடந்து நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைத்தோரைத் தண்டிக்காமல், அமெரிக்க அரசு, அத் தவறுகளை அம்பலப்படுத்தியோரை வேட்டையாடுகிறது.

நாட்டின் பாதுகாப்பு என்பது, மக்களின் பாதுகாப்பாக அன்றி அரசினதும் அது காத்துநிற்கும் அதிகார வர்க்கத்தினதும் பாதுகாப்பாக மட்டுமே உள்ளமையை ஒவ்வொரு முதலாளிய நாட்டிலும் நாம் காணுகிறோம். முக்கியமான பாடம் ஏதென்றால் பிற நாடுகளைத் தன் ஆதிக்கத்துக்குட்படுத்த முனையும் எந்த அரசும் தன் கண்காணிப்பை அந்நிய எதிரிகட்கு மட்டுப்படுத்தாது. ஆக்கிரமிப்பு நோக்கம் அரசின் பாதுகாப்பின்மையை அதிகரிக்கிறது. எனவே தன்னுடைய மக்களையும்

கண்காணித்துக் கட்டுப்படுத்தும் தேவை ஏற்படுகிறது. மக்களிடையே பாதுகாப்பின்மை உணர்வை உண்டாக்கித், தமது பாதுகாப்பின் பெயரில் அரசு தம்மைக் கண்காணிப்பதை அவர்கள் விரும்பி ஏற்கும் நிலை உருவாக்கப்படுகிறது. இன்று தொடர்பாடலிற் பெருமளவு நவீன தொழில் நுட்பத்திற் தங்கியுள்ளதால் அத் தொழில் நுட்ப உதவியுடன் அமெரிக்காவில் 'மக்கர்த்தி யுகம்' மீள நிலைபெறுகிறது. எனவே இக் கண்காணிப்பு அமெரிக்காவின் எதிரிகளை விட அமெரிக்க மக்களுக்கே அதிகம் கேடானது.

இந்திய இணைத்தளப் பாவனையாளர்களையும் அமெரிக்க அரசு தனது கண்காணிப்பு வலைக்குட் கொண்டுள்ள பின்னணியில், இந்திய அரசு, தன் கண்காணிப்பு இயந்திரத்தை வலுப்படுத்த, 'மத்தியப்பட்ட தெரிவிப்பி முறைகள்' என்ற கண்காணிப்பு அமைப்பை நிறுவியுள்ளது. அதன் கண்காணிப்புச் செயற்பாடுகள் அமெரிக்காவினதைப் போன்று தொலைபேசி வலையமைப்புகக்கள் முதல் மின் தகவற் பரிமாற்றம் வரை விரிவன. அவை இந்திய அரசியற் சூழலில் சட்டவிரோதமான அரச நடவடிக்கைகட்கும் பாரிய துஷ்பிரயோகங்கட்கும் பயன்படலாம் என்பதால் அதைப் பற்றிப் பல கோணங்களிலுமிருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனினும் நாட்டிற்கெதிரான உள்நாட்டு, அந்நிய மிரட்டல்களின் நீண்ட பட்டியல் இந்திய அரசிடம் உள்ளது. எனவே, ஆட்சித் தலைமைகள் மாறினும் அரசாங்கங்கள் மாறினும், குடிகள் மீதான கண்காணிப்பை அரசு வலுப்படுத்திக்கொண்டே போகும்.

முற்கூறியவற்றின் அடிப்படையில், இலங்கை அரசு இப்போது அச்சு, மின் ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகளைத் திணிப்பதை, ஏலவே வலுப்பெற்றுள்ள அரச அடக்குமுறையுடனும் ஃபாஸிஸம் நோக்கிய அரசியல் முனைப்புடனும் சேர்த்தே கவனிக்கவேண்டும். அத்துடன் அமெரிக்க, இந்தியக் கண்காணிப்பு வலைகளையொத்த தொழில்நுட்ப வாய்ப்பு வசதிகளற்ற ஒரு அரசு அவ் வலைகளால் தானும் பயன்பெற முனையலாம். எனவே இங்கே உருவாகக்கூடிய கண்காணிப்பு அரசு, தன்னையும் மக்களையும் ஏகாதிபத்திய, மேலாதிக்கக் கண்காணிப்பு வலைகட்குள் உட்படுத்தும் அபாயம் பற்றி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அந்நியத் தகவல் அமைப்புக்கள் உட்பட்ட அயல் நிறுவனங்கள் பற்றி நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

*****

# பொதுவுடைமை அரசியல் பயணத்தில் தோழர் சூடாமணியின் பங்களிப்பு

*சி.கா.செந்திவேல்*

பொதுச் செயலாளர், புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி

மூத்த பொதுவுடைமைவாதி என்ற அர்த்தமிகு அடையாளத்தைப் பெற்ற தோழர் இ.கா. சூடாமணி கடந்த 2013 மார்ச் 29ம் திகதியன்று தனது 76வது வயதில் இயற்கையெய்தினார். மூத்த பொதுவுடைமைவாதி என அவர் அழைக்கப்படுவது வெறுமனே அடைமொழியாக அல்ல. அதற்குள் இருந்துவந்த பல்வேறு பரிமாணங்களின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே அவர் அன்புடனும் மதிப்புடனும் தோழமையுடனும் எல்லோராலும் ஏற்கப்பட்டிருக்கிறார். அவர், வடபுலச் சூழலில், இலங்கையின் பொதுவுடைமைப் பரப்பின் பல்வேறு தளங்களில் பங்கும் பணியும் ஆற்றி வந்தவராவார். இளைஞர் அமைப்பு, கட்சி அமைப்பு, வெகுஜன இயக்கம், தொழிற்சங்க இயக்கம், கட்சிப் பத்திரிகை நிர்வாகமும் விநியோகமும், இலக்கிய அமைப்புகள், சஞ்சிகைகளின் விநியோகம் போன்ற சகல தளங்களிலும் அவர் தனது தடங்களைப் பதித்துச் செனறுள்ளார்.

தோழர் சூடாமணி வலி-வடக்கு காங்கேசன்துறை தையிட்டிக் கிராமத்தின் சாதாரண உழைப்பாளர் குடும்பத்தில் பிறந்தவர். அவரால் ஆரம்பக் கல்வியை மட்டுமே கற்கமுடிந்தது. குடும்பத்தில் மூத்த மகனாக அவர் இருந்தமையால், குடும்பச் சூழல் காரணமாகத் தனது தந்தையாருடன் சேர்ந்து உடல் உழைப்பில் ஈடுபடத் தொடங்கினார். தமக்குரிய ஒரு கல்வீடு கட்டுவது குடும்பத்தின் குறிக்கோளாக இருந்தது. அதனை அடைவதற்கு இளமைப் பராயத்திலேயே தோழர் சூடாமணி தந்தையாரோடு சேர்ந்து கடும் உழைப்பில் ஈடுபட்டுவந்தார். கல்வீட்டுக்காக மட்டுமன்றித், தான் கல்வியைத் தொடரமுடியாத குடும்பச் சூழலிலும், தனது சகோதரர்கள் கல்வி பெறுவதை

ஊக்குவித்து, அதற்கான உழைப்பிலும் ஈடுபட்டு வந்தார். தனது ஆரம்பக்கல்வி மூலம் பெற்ற எழுத்து வாசிப்பு அறிவைக் கொண்டு விடயங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் மிக்கவராக அவர் இறுதிவரை இருந்துவந்தார். அவரிடம் காணப்பட்ட அதி சிறப்பு என்னவென்றால் தான் கல்வி அறிவு குறைந்தவன் என்ற தாழ்வுச் சிக்கலை அவர் என்றுமே கொண்டிருக்கவில்லை. அதே வேளை, கற்றது கைம்மண் அளவாயினும், அதனைக் கொண்டு தனது சமூக அரசியல் ஆளுமையை விருத்தி செய்துகொண்டமை நம் எல்லோருக்கும் முன்மாதிரியானதாகும். அந்தச் சமூக அரசியல் ஆளுமையை மாக்சிசத்தின் மூலம் பெற்ற ஒரு வரமாகத் தோழர் சூடாமணி வரித்துக் கொண்டார். அதுவே, மூத்த பொதுவுடைமைவாதி என்ற உயர்ந்த இடத்திற்கு மக்கள் மத்தியில் அவரை உயர்த்தியது.

தோழர் சூடாமணி 18வது, 19வது வயதுகளில் தன்னைச் சூழவுள்ள சமூகச் சூழலை அவதானிக்கவும் அவை பற்றி ஏன் எதற்காக எப்படி என்ற கேள்விகள் எழுப்பவும் தலைப்பட்டார். இது இளம் பராயத்தில் எவருக்கும் ஏற்படும் இயல்பான முனைப்பாகும். அச் சூழலிலேயே அவருக்கு மாக்சிசம் அறிமுகமாகப் பெற்றது. அந்த வாய்ப்பு அவரது வீட்டுக்கு அயலில் வாழ்ந்துவந்த கம்யூனிஸ்ட்டான தோழர் சு.வே. சீனிவாசகம் மூலம் கிட்டியது. சீனிவாசகம் ஒரு ஆயுர்வேத வைத்தியர். அவரது வைத்தியமும் மக்கள் மீதான அக்கறையும் அக்காலத்தில் மக்கள் மத்தியில் அவருக்கு நற்பெயரை ஏற்படுத்தியிருந்தன. அத்தகைய உறுதிமிக்க ஒரு கம்யூனிஸ்டினால் தோழர் சூடாமணியின் இளம் பராயக் கேள்விகட்கு விடைகள் கிடைக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. அவ்வேளை, முக்கிய விடயம் ஒன்றைத் தோழர் சூடாமணி நினைவு கூர்ந்திருந்தார். தனக்குப் பத்து வயதாக இருந்தபோது, 1948ம் ஆண்டளவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டதால் தோழர் ப. ஜீவானந்தம் தலைமறைவாகி இலங்கையில் இருந்துவந்ததைத் தோழர் சூடாமணி கூறினார். அவ்வேளை, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, தோழர் ப. ஜீவானந்தத்தை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தலைமறைவாக வைத்திருக்க ஏற்பாடு செய்திருந்தது. அதன்படி, தோழர் மு. கார்த்திகேசன் வடபுலத்தில் அதற்கான பொறுப்பை ஏற்று ஜீவாவை யாழ்ப்பாணத்தில் தங்கவைக்க ஏற்பாடுசெய்தார். தோழர் ஜீவா காங்கேசன்துறை தையிட்டியில் அமைந்துள்ள டாக்டர் சு.வே. சீனிவாசகம் வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்தார். கம்யூனிஸ்டுக்கள்

தலைமறைவாக இருப்பது என்பது பூட்டிய வீட்டினுள் ஒழிந்திருப்பது அல்ல. அவர்கள் மக்கள் மத்தியில் தமது கட்சி அரசியல் பிரசாரத்தை மேற்கொண்டபடியே இருப்பர். அவ்வகையில், தோழர் சு.வே. சீனிவாசகத்தின் வீட்டிற்கு அருகில் இருந்த பாடசாலையில் ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் தோழர் ஜீவா உரையாற்றினார். பத்து வயதுச் சிறுவனாக இருந்த தோழர் சூடாமணி அக் கூட்டத்தைப் புதினம் பார்ப்பதற்குச் சென்றிருந்தார். அப் பாடசாலை சூடாமணியின் வீட்டிற்கு முன்னால் அமைந்திருந்தது. அவ்வேளை, அங்கு நின்றிருந்த தன்னைத் தனது தந்தையார் வந்து கையில் பிடித்து வீட்டுக்கு வா என இழுத்தழைத்துச் செல்ல, வீட்டில் தாயார் ஏசிய கடும் வசனங்களை தோழர் சூடாமணி எம்முடன் நினைவுகூர்ந்திருக்கிறார். தாயார் கூறிய வசனங்கள் “டாக்குத்தருக்கு வேலை இல்லை. கண்ட நிண்ட சாதியளை எல்லாம் சேர்த்துவைத்து ஆரோ ஜீவா என்கிறவரைக் கூட்டிவந்து கூட்டம் வைக்கிறாராம். அந்த எளிய சாதிகளின்ட கூட்டத்தைப் பார்க்க நீயும் போய் நிக்கிறியோ” என்பதாகும். தோழர் சூடாமணியின் பாலிய நெஞ்சத்தில் இச் சம்பவம் ஆழப் பதிந்ததுடன் தனது 18வது, 19வது வயதுகளில் தோழர் டாக்டர் சு.வே. சீனிவாசகத்தையும் அவரின் ஊடாக மாக்சிசத்தையும் நோக்கித் திரும்பவும் அதனால் ஈர்க்கப்படவும் வழிவகுத்தது.

தோழர் சு.வே. சீனிவாசகம் சூடாமணியை விட வயதில் மூத்தவர். சூடாமணியின் வயதையொத்த தி. குமாரலிங்கம் மாக்சிசத்தை உள்வாங்கியவராக இருந்தார். அவரும் தையிட்டியைச் சேர்ந்தவராவார். அவரது பகுதியிலேயே கலாவல்லி சனசமூக நிலையம் அமைந்திருந்தது. தோழர் குமாரலிங்கத்தின் மூலம் தோழர் சூடாமணி மாக்சிச உலக நோக்கைப் பெற்று கம்யூனிஸ்ட் கட்சிக்கு அறிமுகமானார். சூடாமணியும் குமாரலிங்கமும் மிக நெருக்கமான தோழர்களாகி அக் கிராமத்திலும் வலிகாமம் வடக்கு பிரதேசத்திலும் தீவிர கம்யூனிஸ்ட் இளைஞர்களாக நின்றனர். இச் சூழலில், 1958ம் ஆண்டின் ஆரம்பத்தில், வலிகாமம் வடக்கு என்ற பரந்த பிரதேசத்திற்கான கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கக் கிளையில் அவர் ஓர் உறுப்பினராகச் சேர்ந்தார். மாதகல் முதல் பலாலி வரை இணுவில், தாவடி முதல் காங்கேசன்துறை வரையான பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய அக் கிளையிற் பலர் இணைந்திருந்தனர். அதன் பணிமனை சுன்னாகத்தில் அமைந்திருந்தது. அங்கு தான் தோழர்

கே.ஏ. சுப்பிரமணியம் கட்சியின் முழுநேர ஊழியராக அரசியல் பணியாற்றி வந்தார். அதிக எண்ணிக்கையினரைக் கொண்ட மேற்படி வலி-வடக்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தில் கே.ஏ. சுப்பிரமணியம், வி. பொன்னம்பலம், சி. தில்லைநாதன் (பேராசிரியர்), உடுவில் யோகேந்திர சர்மா (மான் ஸ்கூல் அதிபர்), சுன்னாகம் சுந்தரலிங்கம், எஸ். விஜயானந்தன், திருநாவுக்கரசு (தபால் அதிபர்), மாதகல் கந்தசாமி போன்ற பலர் அங்கம் பெற்றிருந்தனர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் அதற்குத் தலைவராகவும் தோழர் சுந்தரலிங்கம் (சுன்னாகம்) செயலாளராகவும் இருந்தனர். அக் காலத்திலேயே வித்துவான் ஆறுமுகத்தை ஆசிரியராகக் கொண்ட 'கலைமதி' இலக்கிய சஞ்சிகை வெளிவந்தது. அதேவேளை, 'தேசாபிமானி' கட்சிப் பத்திரிகையாக வெளிவந்தது. 'மரகதம்' இலக்கிய இதழை சுபைர் இளங்கீரன் வெளியிட்டு வந்தார். இவ் வெளியீடுகளின் விற்பனை-விநியோகத்தைக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங்கள் பொறுப்புடன் முன்னெடுத்துவந்தன. அன்று ஆரம்பித்த அரசியல் வேலையைத் தோழர் சூடாமணி ஓய்வுறக்கம் இன்றித் தனது எழுபத்தியாறாவது வயது வரை முன்னெடுத்துவந்தமை அவருக்குரிய சிறப்பு அம்சமாகும்.

1958ல் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தில் இணைந்து சில மாதங்களின் பின், தோழர் சூடாமணி அன்றைய கட்சியில் உறுப்புரிமை பெற்றார். மிகவும் கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகளும் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையில் இணைந்ததன் மூலம் தோழர் சூடாமணி தன்னைப் புதிய வார்ப்பாக்கிக் கொள்வதில் அதி அக்கறை செலுத்தி வந்தார். வாசிப்பின் மூலமும் கட்சித் தலைமைத் தோழர்கள் நடத்திய மாக்சிச தத்துவார்த்த வகுப்புகளில் கலந்து கொண்டதன் மூலமும் அவர் தனது கம்யூனிச அரசியல் அறிவைப் பெருக்கியும் உறுதியாக்கியும் கொண்டார். அவர் உழைப்பாளியாக இருந்த காரணத்தால் அவரிடம் வர்க்க உணர்வு இயல்பாகவே கூர்மை கொண்டது. ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் இனம் மொழி சாதி நிறம் பிரதேசம் பால்நிலை வேறுபாடுகளுக்கு அப்பால் மாக்சிச அடிப்படையில வர்க்க உணர்வு பெறுவது அதி முக்கியமானதாகும். அத்தகைய வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளி வர்க்கத்தினரே ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிப் படையினராகச் செயற்படமுடியும் என்பதைத் தோழர் லெனின் வற்புறுத்திச் சென்றார். அதையொட்டியே,

தோழர் மாஓ சேதுங், விதிவிலக்கின்றி எல்லோரிடமும் அவரவருக்கான வர்க்க முத்திரை பதிந்திருக்கும் என்றார். இத்தகைய வர்க்க முத்திரையானது கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின்போது அவ்வப்போது கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் வெளிப்படவே செய்யும். ஒருவர் தொழிலாளி வர்க்கத்தில் இருந்து வந்து உயர்கல்வி பெற்று மேனிலையாக்கம் பெறும்போது அவரிடம் தொழிலாளி வர்க்க உணர்வு இருக்குமென எதிர்பார்க்க முடியாது. அதேபோன்று, விசேட சூழலில் கட்சிக்கு வரும் தொழிலாளி வர்க்கத்தினர் அல்லாத ஒருவர், காலப்போக்கில், தனது கல்வி ஆற்றலை மட்டும் நம்பி மாக்சிசம் லெனினிசத்தைப் படித்துவிட்டதாக எண்ணிக் கல்விச்செருக்குடன் நடந்துகொள்ள முற்படுவார். இத்தகைய போக்கானது உலகிலும் நமது நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கங்களிலும் இருந்து வருவதாகும். இந்த இடத்திலேதான் தோழர் சூடாமணி போன்ற மூத்த தோழர்களிடம் இருந்துவந்த உறுதிமிக்க தொழிலாளி வர்க்க உணர்வையும் அதன் அடிப்படையிலான செயற்பாட்டையும் அடையாளங்காண முடிகிறது.

தோழர் சூடாமணி அன்றைய கட்சியிலும் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்திலும் கடுமையான பணியாற்றி வந்தார். அவரது குடும்பம் உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்திருந்தாலும், வடபுலத்திற்குரிய பழைமைவாதக் கருத்தியற் சிந்தனைக்கு உட்பட்டே இருந்துவந்தது. தோழர் சூடாமணி மாக்சிசத்தை ஏற்றுச் செயற்பட முன்வந்தமை, அவரது குடும்பத்தினுள் கடும் முரண்பாட்டை ஏற்படுத்தியது. அது குடும்பத் தகராறாகவும் அமைந்தது. இத்தகைய போக்கை அவருக்குரியதாக மட்டுமன்றி. மாக்சிச உலக நோக்கை உள்வாங்கிக் கம்யூனிஸ்ட்டாக வாழமுற்படும் ஒவ்வொருவரும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினையாக நோக்குதல் வேண்டும். தோழர் சூடாமணி இவ் விடயத்தில் தனது மாக்சிச நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காது உறுதியாகச் செயற்பட்டு வந்தவராவார்.

1963ம் ஆண்டில் இடம்பெற்ற வடபுலத்து கம்யூனிஸ்ட், முற்போக்கு வாலிபர் சங்கத்தின் 5வது மாநாட்டில், தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் செயலாளாராகவும் எஸ்.பி. நடராசா தலைவராகவும் தோழர் சூடாமணி பொருளாளராகவும் தெரிவாயினர். யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற அம் மாநாட்டிற்கு அன்றைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வந்திருந்தனர். கட்சி புரட்சிகரப் பாதையில்

செல்வதா அல்லது பாராளுமன்றப் பாதையில் பயணிப்பதா என்று கட்சிக்குள் நடந்துவந்த விவாதத்தின் கருத்துக்கள் இவ் வாலிபர் மாநாட்டில் எதிரொலித்தன. அதன் தொடர்ச்சியாக 1964ல் கட்சி இரண்டாகப் பிளவுண்டது. புரட்சிகரப் பாதையினை மேற்கொண்ட கட்சிக்குத் தோழர் நா. சண்முகதாசன, பிரேம்லால் குமாரசிறி போன்ற தலைமைத் தோழர்கள் தலைமைதாங்கினர். வடபுலத்தில், தோழர்கள் மு. கார்த்திகேசன், டாக்டர் சு.வே. சீனிவாசகம், கே.ஏ. சுப்பிரமணியம், கே. டானியல், வீ.ஏ. கந்தசாமி, நீர்வை பொன்னையன் ஆகியோர் உட்பட்ட பல முக்கியமானவர்கள் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியை முன்னெடுத்தனர். தோழர் சூடாமணி அந்த அணியில் இருந்தே செயற்பட்டார்.

1964ம் ஆண்டில் நடைபெற்ற வாலிபர் மாநாட்டில் தோழர் சூடாமணி மீண்டும் வாலிபர் இயக்கப் பொருளாளாராகத் தெரிவு செய்யப்பட்டார். அவ் வாலிபர் மாநாட்டிற் பேசுவதற்கு எனக்கு ஐந்து நிமிடங்கள் தரப்பட்டன. புத்தூரில் அமைக்கப்பட்ட வாலிபர் சங்கத்தின் சார்பிலேயே அது ஒதுக்கப்பட்டது. அன்றைய எனது பேச்சே எனது அரசியல் வாழ்வின் முதலாவது பொதுமேடைப் பேச்சாக அமைந்திருந்தது. அதற்கு இரண்டு வருடங்கள் முன்பாக எனக்கு மாக்சிசத்தையும் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தையும் அறிமுகம் செய்து வைத்து இன்றுவரையான முழுநேர அரசியல் வாழ்வுக்கு வழிவகுத்தவர் தோழர் சூடாமணியேயாவர். அன்று தொடங்கிய எனது அரசியல் பயணம் அவருடன் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் நெருக்கமாக இருந்து செயற்பட வைத்தது. தோழர் சூடாமணி என்னை கைப்பிடித்துச் சென்று கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு அறிமுகம் செய்தபோது அங்கே இருந்த வடபுலத்துத் தலைவர்களில் ஒருவரான தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் கரத்தினை நான் இறுகப் பற்றிக் கொள்ள வழிகாட்டி நின்றவரும் தோழர் சூடாமணியேயாவர்.

எனது இளமைக்கால அரசியல் வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே ஒரு கம்யூனிஸ்டின் வாழ்வுக்குரிய அடிப்படைப் பண்புகளைப் பெற்றுக் கொள்ளத் தோழர் சூடாமணி முன்னுதாரணமாக விளங்கினார். அவரது கடுமையான கட்சிப் பணி எல்லாவற்றிலும் முதன்மையானது. அவர் ஒரு உடல் உழைப்பாளி. ஆனால் பகல் நான்கு மணிக்கு மேல் அவர் கட்சிப் பணிகளில் திட்டமிட்டவாறு செயற்பட்டு வந்தார். அவரது துவிச்சக்கர வண்டியில் ஒரு பையில் கட்சிப் பத்திரிகைகள்,

நூல்கள், பிரசுரங்கள் எப்போதும் இருக்கும். அவர் தனது அரசியல் தொடர்புகளைக் கட்சி உறுப்பினர்கட்கும் ஆதரவாளர்கட்கும் மட்டுப்படுத்தவில்லை. கிராமங்களில் தொழிலாளர்கள் விவசாயிகள் அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் கடற் தொழிலாளர்கள் எனப் பல்நிலை உழைப்பாளர்கள் மத்தியிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கட்சிப் பணியாற்றி வந்தார். அவர் கட்சிக்கான நிதி, பத்திரிகைகள் விற்பனைப் பணம் என்பவற்றிற் கறாரான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். அவர் இயற்கை எய்துவதற்கு சில மாதங்கள் முன்பு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரை அங்கு பார்க்கச் சென்றபோது, தனது சுகவீனம் பற்றிப் பேசுவதற்கு முன்னதாகவே தனது சேட் பொக்கற்றில் இருந்து ஐந்நூறு ரூபாயை எடுத்த இது 'புதிய நீதி' பத்திரிகைக்குத் தரவேண்டிய பணம். ஒரு நண்பர் சிறிது நேரத்தின் முன் தந்துவிட்டுச் சென்றார். இதனைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளுங்கள் எனத் தந்ததன் பின்பே தனது நோயின் விபரங்களைக் கூறினார். இது கட்சி நிதி, பத்திரிகைப் பணம் போன்றவற்றில் அவர் பின்பற்றிய ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் தன் இறுதிநேரம் வரை கொண்டிருந்தமையை எடுத்துக்காட்டியது.

தோழர் சூடாமணியிடம் பொய், ஏமாற்று, வஞ்சகம், சூது, குறுக்குவழி என எதையும் காணமுடியாது. அவர் ஒழுக்கம் கட்டுப்பாட்டில் முன்னுதாரணமாக வாழ்ந்தவர். மது அருந்தல் புகைத்தல் போன்ற பழக்கங்கள் அவரிடம் கிடையாது. வெள்ளை வேட்டி வெள்ளை சேட் கால்களில் சாதாரண வகைச் செருப்பு, மழைக்காலங்களில் குடை, துவிச்சக்கரவண்டி இவற்றை அவருக்குரிய அடையாளங்களாகக் காண முடியும். இவற்றின் ஊடே, தோழர் மாஓ கூறியவாறான 'எளிமையான வாழ்வும் கடுமையான கட்சிப் பணியும்' என்பதற்கு ஏற்ப வாழ்ந்துவந்தார். அதன் மூலம், தோழர் சூடாமணி, ஒரு நேர்மையான கம்யூனிஸ்ட் பெற்றிருக்கக் கூடிய மாக்சிச அடிப்படையிலான மனச்சாட்சியையும் மனித நேயத்தையும் கொண்டிருந்ததுடன், கட்சிக்கும் மக்களுக்கும் பாட்டாளி வர்க்க அரசியலுக்கும் முன்னுரிமை கொடுத்து வாழ்ந்துவந்தார்.

தோழர் சூடாமணி மாக்சிசம் லெனினிசத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுவுடைமை இலட்சியம் நோக்கிய பயணத்தில் பழைய கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இணைந்து கொண்டவர். அதுவே 1964ல் பிளவடைந்து புரட்சிகரக் கட்சியாகத் தோழர் சண்முகதாசனுடன்

தலைமையில் முன்சென்றபோது அதில் முக்கிய பாத்திரம் வகித்தார். அக் காலத்திலேயே 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் போராட்டங்களும் முனைப்பெய்தி நின்றன. அவ்வேளை, சுன்னாகம் ஊர்வலத்தில் முன் நின்று இரத்தக் காயம் பட்டவர்களில் அவரும் ஒருவராகியதுடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்தும் வைக்கப்பட்டார். அதன் பின்னரான போராட்ட காலகட்டத்தில் பிற்போக்குவாதிகளினதும் சாதி வெறியர்களினதும் பொலிசாரினதும் கடுந் தாக்குதல்களுக்கு அவ்வப்போது ஆளாகினார். உட்காயங்கள் வெளிக்காயங்களுக்கு உள்ளாகிய அவர் அவற்றின் மூலம் நோய்வாய்ப்பட்டார். அதன் காரணமாக மருந்துகளுடன் வாழ்ந்து வந்தார்.

இக் காலப்பகுதியில், அவரும் மனைவியும் ஐந்து பிள்ளைகளும் கொண்ட குடும்பம் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியது. தோழர் சூடாமணி தனது குடும்பத்தைப் பாதுகாக்கப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்த அதேவேளை, கட்சிப் பணிகளையும் முன்னெடுத்து வந்தார். சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் சாதிய தீண்டமைக் கொடுமைகளுக்கும் எதிராகப் போராடிநின்ற வேளை, குடும்ப வாழ்வில் கடும் வறுமையை எதிர்த்துப் போராட வேண்டியவராகவும் தோழர் சூடாமணி இருந்துவந்தார். எனினும் தமது பிள்ளைகளுக்கு உரிய கல்வியை வழங்குவதில் தோழர் சூடாமணியும் அவரது துணைவியார் தங்கமும் என்றும் பின்னின்றது கிடையாது. அவ் விடயத்தில் தோழர் சூடாமணி சிலவேளைகளில் கடுமையானவராகவும் இருந்துவந்தார். அவர் தமது பிள்ளைகள் மட்டுமன்றி ஏனையவர்களின் பிள்ளைகளும் கல்வி பெறுவதை ஊக்குவித்து வந்தவராவார்.

தோழர் சூடாமணி தனது கட்சிப் பணியால் வலிவடக்கில் மட்டுமன்றி வடபுலம் முழுவதிலும் அறியப்பட்டவராகச் செயற்பட்டு வந்தார். அக்காலத்தில் அயற்கிராமங்களைச் சேர்ந்த தோழர்களுடன் இணைந்து பல்வேறு சமூக அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டார். அவர்களில் அவருடன் இறுதிவரை நின்றவர்களில் மு. கந்தப்பிள்ளை, கணபதிப்பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் இருவரும் தோழர் சு.வே. சீனிவாசகத்தின் தலைமையிலான காங்கேசன்துறைப் பிரதேசத்தில் இயங்கிய முக்கிய தோழர்களாவர். அதேபோன்று, இறுதிவரை தமது கம்யூனிஸ்ட் நிலைமாறாது இருந்து வந்த தோழர் சிதம்பரி, தோழர் சூடாமணியின் அன்புக்கும் தோழமைக்கும் உரியவராக இருந்து வந்தார். தோழர் சூடாமணி, சிதம்பரியுடன்

இறுதிவரை நட்புறவுடன் இருந்துவந்தார். அவ்வாறே மற்றொரு தோழரான பூ. சின்னராசா, கந்தையா குடும்பத்தவர்களுடனும் மிகுந்த அரசியல் நட்புறவுடன் இருந்துவந்தார். காங்கேசன்துறைப் பகுதியில் ஆசிரியர் செல்வராசா, கருணாநிதி, ரஞ்சன், யோகராஜா, குலசேகரம், ஞானம் போன்ற தோழர்களுடன் இணைந்து வாலிபர் இயக்கத்தினதும் கட்சியினதும் செயற்பாடுகளில் தோழர் சூடாமணி நெருக்கமாகச் செயற்பட்டு வந்தார். இத்தகைய கட்சித் தோழர்களுக்கும் அப்பால் தோழர் சூடாமணி பல்வேறு நண்பர்களை அரசியல் சமூகத் தளங்களில் பெற்றிருந்தார். அத்தகைய பெரும் குழாத்தினர் தோழர் சூடாமணியை உயர்வாகவே மதித்து வந்தனர்.

காங்கேசன்துறையில் அமைந்திருந்த சீமெந்துத் தொழிற்சாலையில் கட்சியின் தலைமயிலான தொழிற்சங்கம் இருந்து வந்தது. அத் தொழிற்சங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களே அத் தொழிற்சங்கத்தின் உந்துவிசையாகவும் விளங்கினர். 1964ல் பல கோரிக்கைகளை முன்வைத்துக் காங்கேசன் சீமெந்துத் தொழிலாளர்கள் ஒரு மாதகாலம் வரையான வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தினர். அதன்போது காங்சேன்துறையின் கட்சித் தோழர்கள் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினர். இளம் கம்யூனிஸ்டாக இருந்த தோழர் சூடாமணி அவ் வேலைநிறுத்தம் வெற்றிபெறக் கடுமையாக உழைப்பதில் ஏனைய தோழர்களுடன் முன் நின்றார். இறுதியில் நிர்வாகம் பணிந்து முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளை வழங்க வேண்டியதாயிற்று. அவ்வேளை, தோழர் சூடாமணி அத் தொழிற்சாலையின் தொழிலாளி அல்லர். ஆனால் எண்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட மற்றொரு பிரிவான லங்கா சீமெந்து பிறைவேற் லிமிற்றற் என்ற அமைப்பின் கீழ் வேலைவாய்ப்புப் பெற்று ஒரு தொழிலாளியாக இணைந்துகொண்டார். அதன்பின் அங்கு வேலை செய்துவந்த தொழிலாளர்கள் சார்பாகத் தொழிற்சங்கம் அமைப்பதிலும் கோரிக்கைகளை முன்வைப்பதிலும் அவற்றை முன்னெடுப்பதிலும் தோழர் சூடாமணி முன் நிலை வகித்தார். அக் காரணமாகத் தொழிலாளர்கள் தோழர் சூடாமணியை அதன் தலைவராகத் தெரிவு செய்தனர். அந்தப் பொறுப்பினை ஏற்ற தோழர் சூடாமணி ஒரு தொழிற்சங்கத் தலைவருக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்வுடனும் வர்க்க நிலைப்பாட்டுடனும் தலைமைத்துவ ஆளுமையுடனும் தொழிலாளர்களின் பிரச்சினைகட்காக வாதாடியும் போராடியும் வந்தார் என்பது முக்கியமானதாகும். மேற்படி

தொழிற்சாலை மூடப்பட்டு அனைத்துத் தொழிலாளர்களும் மட்டுமன்றி வலி வடக்கு மக்களும் விரட்டப்பட்ட 1990ம் ஆண்டுவரை, மேற்படி பணியினை தோழர் சூடாமணி மேற்கொண்டிருந்தார். அதன்பின்பும், இடம்பெயர்ந்த நிலையில் இருந்த தொழிலாளர்களுடன் தொடர்பு கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்துவந்தார். அத்துடன் இடம்பெயர்ந்த வலிவடக்கு மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற இயக்கத்தை முன்னெடுப்பதிலும் முன்நின்று வந்தார். அவரது குடும்பமும் சொந்த இடம் இழந்து வீடு எரிக்கப்பட்டு அகதிகளாகிய குடும்பங்களில் ஒரு குடும்பமாகிப் பல்வேறு துன்ப துயரங்களுக்கு ஆளாகி, இன்றுவரை சொந்த இடத்திற்குத் திரும்பவில்லை.

யுத்தம் விளைவித்த கொடுமைகளுக்குள்ளான வடக்குக் கிழக்கின் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களில் தோழர் சூடாமணியின் குடும்படும் ஒன்றாகும். முதலில் இடப்பெயர்வு, அதன் நடுவே திருமணம் செய்த தமது மூத்த மகனைத் திருகோணமலையில் கண்ணிவெடி விபத்தில் இழக்கிறார்கள். அதன் பின் புக்காரா விமானத் தாக்குதலில் படுகாயமடைந்து மனைவி ஒரு காலை இழக்கிறார். பிள்ளைகளின் உயர் கல்வி கேள்விக்குறியாகிறது. உரிய உழைப்பு இல்லை. ஒரு மகள் மட்டும் ஆசிரியர் தொழில் பெற்ற நிலையில் வவுனியா நோக்கி அவரது குடும்பம் இடப்பெயர்வு நகர்வை மேற்கொள்கிறது. அங்கு தம்மை நிலைநிறுத்திக் கொள்ள தோழர் சூடாமணி குடும்பம் கண்ணீர், இரத்தத்தின் ஊடே எதிர்நீச்சல் இட்டு முழுமுயற்சி எடுக்கிறது. ஏற்கெனவே அனுபவித்தவற்றை விடப் பலமடங்கினை அவர்கள் எதிர்கொள்கிறார்கள். இவை போன்றவற்றை எதிர்கொள்வது மனித வாழ்வில் இயல்பு என்ற போதிலும் எதற்கும் ஒரு எல்லை உண்டு. அந்த எல்லையைத் தாண்டியும் தாங்கி நிற்பது விதிவிலக்கானது. அதற்கான தன்னம்பிக்கை துணிவு விடாமுயற்சி ஆகிய யாவற்றையும் தோழர் சூடாமணியின் குடும்பம் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் தோழர் சூடாமணி அடிப்படையில் கொண்டிருந்த மாக்சிச உலக நோக்கும் அதன்பாற்பட்ட மன உறுதியுமேயாகும். மனைவி பிள்ளைகளுக்கும் அந்த நம்பிக்கையை அவர் ஊட்டி வளர்த்திருந்தார். அவர்கள் எந்தக் கடவுளர்களிடமும் மன்றாடவில்லை. எந்தக் கோவிலுக்கும் சென்று அழுது குழறவில்லை. சக மனிதர்களையும் நண்பர்களையும் கட்சியையும் கட்சித் தோழர்களையும் அவர்களின் மூலம் ஏற்பட்ட தொடர்புகளையுமே

தோழர் சூடாமணி நம்பினார். அது வீண் போகவில்லை. அதன் வெளிப்பாடே தனது இறுதி யாத்திரையானது எவ்வித பழைமைவாத மூட நம்பிக்கைகளின் அடிப்படையிலும் இடம்பெறக் கூடாது என்பதை வெளிப்படுத்தி எழுதிய அவரது துணிவும் அறிவியலும் கொண்ட கடிதமாகும். அதனை 1999ம் ஆண்டே எழுதிக் குடும்பத்தினருக்கும் கட்சித் தலைமைக்கும் சேர்ப்பித்திருந்தார். பழைமைவாத மதச் சடங்குகள் சம்பிரதாயங்கள் மூடநம்பிக்கைகள் பெருகி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் தோழர் சூடாமணியின் சமூக விஞ்ஞான வழிப்பட்ட மாக்சிச நிலைப்பாடானது முன்னுதாரணமிக்க செயலாகியது. அதற்கு அவரது மனைவி பிள்ளைகள் மறுப்பின்றி இணங்கிச் செயற்பட்டமை முக்கியமானதாகும்.

தோழர் சூடாமணியும் அவர்தம் மனைவி பிள்ளைகளும் முன் அறிமுகம் இல்லாத வவுனியாவில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளவும், கல்வி முயற்சிகளும் அதன் மூலமான தொழில் முயற்சிகளும் படிப்படியாகப் பயன்தரத் தொடங்கின. அவரது ஒரே மகளுக்கு திருமணமும் நடைபெற்றது. அதிற்கூடத் தோழர் சூடாமணி தனது கொள்கைரீதியான நிலைப்பாட்டில் நின்று மலையகத்தில் மகளுக்கான திருமண உறவைத் தேடிக்கொண்டார். தோழர் சூடாமணி தனது குடும்பத்தைத் தான் வரித்துக் கொண்ட கொள்கை நடைமுறை எல்லைகளுக்குள் வைத்து வழிநடத்தி வந்தபோது, மனைவி பிள்ளைகளின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்து வந்தமை, அவரை உறுதியாக மேலும் வழிநடக்க உதவியது. அவரது குடும்ப வாழ்விற் பட்ட துன்பங்கள், வேதனைகள், வறுமை, இல்லாமை ஒருபுறமிருக்க மறுபுறம் அவர் மீதான அரசியற் காழ்ப்புணர்வு காரணமான ஏச்சுக்கள், பேச்சுக்கள், தாக்குதல்கள், ஒதுக்கிவைத்தல்கள், ஏளனப் பேச்சுக்கள் அத்தனையையும் சூடாமணியும் அவரது குடும்பத்தினரும் துணிவுடன் எதிர்கொண்டார்கள். அதற்கான காரணம் அவர் வரித்துநின்ற பொதுவுடைமைக் கொள்கையும் அதனை முன்னெடுத்த அவரது கட்சிப் பணியுமேயாகும். சொத்து சுகம் பணமீட்டல் ஆடம்பர வாழ்வு அந்தஸ்துக் காட்டல் அவற்றுடன் பழமைவாத சடங்குகள் சம்பிரதாயங்கள் மூடநம்பிக்கைகள் போன்றவற்றை முதன்மைப்படுத்தி நிற்கும் இன்றைய சமூகச் சூழலில் இப்படித்தான் வாழவேண்டும் என வரையறைசெய்து வாழ்ந்துகாட்டியவர் தோழர் சூடாமணி. அத்தகைய வாழ்க்கைதான் அவரைக் கட்சியும் கட்சித் தோழர்களும் மக்களும் உயர்வாக மதிக்க அடிப்படையாகியது. அதனாலேயே அவர்

அர்த்தமுள்ள வாழ்வைக் குடும்பத்திலும் அரசியல் பொது வாழ்விலும் வாழ்ந்து சென்றார் எனத் துணிந்து சொல்ல முடிகிறது.

வவுனியாவில் தனது இடப்பெயர்வு வாழ்வை நிலைப்படுத்திக் கொண்டது போன்றே, தோழர் சூடாமணி தனது கட்சிப் பணியையும் அங்கு விரிவுபடுத்திக் கொண்டார். முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு பிரதேசத்தில் எப்படிக் கட்சிப் பணியை ஆரம்பிப்பது என்பதற்கு தோழர் சூடாமணி சிறந்த முன்மாதிரியான கம்யூனிஸ்டாக விளங்கினார். அவரது கட்சிப் பணிக்கான வாகனம் எப்போதும் துவிச்சக்கர வண்டியாகவே இருந்து வந்தது. அவர் வவுனியா வந்ததும் முதலிற் செய்த வேலை பல்வேறு பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியமர்ந்தவர்களிடையே இருந்துவந்த கட்சித் தொடர்புள்ளவர்கள், வலி-வடக்கு மக்கள், ஊரார், வடபுலத்து நண்பர்கள், துன்பப்பட்டு நிற்கும் மக்கள் போன்றவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி நம்பிக்கை கொடுத்து அரசாங்க உதவிகளுக்கும் தொடர்புகளுக்கும் வழிவகை கூறித் தன்னால் முடிந்தவற்றைச் செய்து வந்ததுடன், அத்தகையோர் மத்தியில் சமூக அரசியல் உணர்வு கொண்டவர்களை அடையாளம் கண்டுகொண்டமையாகும். அதன் பின்பே அவர் கட்சிப் பத்திரிகையான ‘புதிய பூமி’யையும், இலக்கிய சஞ்சிகையான ‘தாயகத்’தையும் விநியோகித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார். அவ்வாறே கட்சியின் அரசியல் தத்துவார்த்த ஏடான ‘New Democracy’ சஞ்சிகையையும் வவுனியாவில் அறிமுகப்படுத்தினார். இவற்றை நாள்தோறும் தனது சில மணி நேரக் கடமையாகவே செய்து வந்தார். அதனால் இவரை வெறும் பத்திரிகை விற்பனையாளர் ஒருவர் என்றே சிலர் ஆரம்பத்தில் பேசிக் கொண்டனர். ஆனால் கட்சிப் பத்திரிகைகள் என்பன கட்சிக்கும் மக்களுக்குமிடையிலான வலுமிக்க பாலமாக இருப்பன என்ற நடைமுறை உண்மையை அங்கு தோழர் சூடாமணி மூலமே பலர் அறிந்து கொண்டனர். கட்சி அறிமுகமின்றி இருந்துவந்த வவுனியாப் பிரதேசத்தில் வலுவான கட்சி அமைப்பு தோன்றுவதற்கும் புதிய உறுப்பினர்கள் உருவாகி முன்செல்வதற்கும் தோழர் சூடாமணி முன்னெடுத்த வேலைமுறையானது அடிப்படையாக அமைந்தது. அவர் வவுனியா மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட தொடர்புகளையும் ஏற்படுத்தி அவற்றின் ஊடே ஏனைய தோழர்களையும் இணைத்தவாறு முன்சென்றமையானது அவரது இறுதிக்கால அதி உயர்ந்த கட்சிப் பணிப் பங்களிப்பின் உச்சம் என்றே கூறுதல் வேண்டும். அவரது

தோழமை உணர்வின்பால் பெருமதிப்புக் கொண்டு செயற்பட்டு வரும் வவுனியாவின் கட்சித் தோழர்கள் அவரது வளர்ப்பின் சின்னங்களாவர். இரத்தத் துளிகளும் சேறும் படிந்த வெள்ளை வேட்டி சேட்டுடன் இடம்பெயர்ந்து தனது குடும்பத்துடன் துன்ப துயரச் சுமைகளோடு வவுனியா வந்த தோழர் சூடாமணி பதினெட்டு ஆண்டுகளின் பின் செங்கொடிகள் தாழப் பதிந்து புடைசூழ ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களது துயரப் பகிர்வுடன் தனது இறுதி யாத்திரையை மேற்கொண்டு “நான் போய்வருகிறேன், நீங்கள் தொடருங்கள்’ என விடைபெற்றுச் சென்றுள்ளார். வவுனியா பூந்தோட்ட மயானத்திலும் புதுமை நிலைநாட்டிச் சென்ற தோழர் சூடாமணியின் நினைவுகள் என்றும் நமது புரட்சிகர இயக்கத்தில் மறக்க முடியாதவையாகும்.

தோழர் சூடாமணி பொதுவுடைமை இயக்கப் பரப்பில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் 1958ல் இணைந்தபோது பீற்றர் கெனமன் அதன் பொதுச் செயலாளாரக இருந்தார். தோழர் மு. கார்த்திகேசன், அ. வைத்திலிங்கம் போன்றோர் அவ்வேளை வடபுலத்துத் தலைவர்களாக இருந்தனர். பின்பு 1964ல் கட்சி இரண்டாகிய போது புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியில் தோழர் சூடாமணி தொடர்ந்து இருந்துவந்தார். அப்போது தோழர் நா. சண்முகதாசன் பொதுச் செயலாளராக இருந்தார். அதன் பின் மாக்சிச லெனினிசக் கட்சியாக 1978ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தோன்றியபோது தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் அதன் பொதுச் செயலாளராக இருந்தார். கட்சி வளர்வதற்கு முழுப் பங்களித்த தோழர் சூடாமணி அதன் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றி வந்தார். அதன்பின் 1989ல் தோழர் மணியத்தின் மறைவையொட்டி தோழர் சி.கா.செந்திவேல் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுக் கட்சியின் பெயர் புதிய ஜனநாயகக் கட்சியாக மாறிக் கடந்த ஐந்தாவது மாநாட்டில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியாகியது. மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை என்ற தத்துவார்த்த அடிப்படையில் செயற்பட்டுவரும் கட்சியாக நிமிர்ந்துநின்று செயற்படுவதற்குப் பல தோழர்கள் அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை அர்ப்பணிப்பும் தியாகமும் மிக்க பங்களிப்புகளை வழங்கிவந்துள்ளனர். அதில் தோழர் சூடாமணியின் பங்களிப்பு முன்னுதாரணம் மிக்கதாகும்.

தோழர் சூடாமணியின் கம்யூனிஸ்ட் அரசியல் வாழ்வில் இருந்து வந்த மற்றொரு சிறப்பு யாதெனில் காலத்திற்குக் காலம் எமது

மாக்சிச லெனினிசக் கட்சியை உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் சீர்குலைக்கவும் பலவீனப்படுத்தவும் முனைந்த சக்திகளை எதிர்த்துப் போராடுவதில் அவர் முன் நின்றமையாகும். கட்சி அமைப்பு ரீதியான அவரது மாக்சிச லெனினிசக மாஓசேதுங் சிந்தனை நிலைப்பாடு எப்போதும் கட்சியைப் பாதுகாத்து முன்னெடுப்பதில் முன்நிலைத் தோழராகவே இருந்துவந்தார். இதனை அவர் தனக்குரிய வர்க்கக் கடமையெனவும் கொண்டிருந்தார். தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் 1989ல் கடும் நோய்கண்டு வைத்தியசாலைக் கட்டிலில் இருந்தவாறு கட்சியின் தலைமைத் தோழர்களைத் தனது அருகில் “எமது கட்சியைத் தத்துவத்தாலும் நடைமுறை புரட்சிகர மாக்சிச லெனினிசக் கட்சியாகப் பாதுகாத்து வளர்த்து முன்னெடுப்பதில் நீங்கள் உறுதியாகவும் கூட்டாகவும் இருந்து இறுதிவரை செயற்பட வேண்டும்” எனக் கூறிச்சென்ற அந்த நம்பிக்கையைப் பாதுகாத்து வந்ததில் தோழர் சூடாமணியின் பங்களிப்புப் பாரியதாகும். தோழர் மணியமும் தோழர் சூடாமணியும் பொதுவுடமை இயக்கத்தில் சமகாலத் தோழர்களாகப் பயணித்து வந்தவர்கள் என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

1958ல் தையிட்டிக் கிராமத்திலிருந்து 20 வயது இளைஞனாக ஆரம்பித்த தோழர் சூடாமணயின் பொதுவுடைமை இயக்கப் பயணமானது 2013 மார்ச் 29ம் திகதி வவுனியாவில் அர்த்தம் தரும் வகையில் நிறைவடைந்தது. அவருக்கு எமது கட்சியின் மத்திய குழுவினதும் அனைத்து உறுப்பினர்களினதும் புரட்சிகர இறுதி வணக்கம் உரித்தாகுக.

05.05.2013

*(நன்றி: **சூடாமணி**, இளவேனில் வெளியீட்டகம், வவுனியா)*

*****

# ஹலால்: வெறுமனே ஒரு சாட்டு
## இலங்கையில் சிங்கள-பௌத்த சகிப்பின்மை

*மோகன்*

### மத முரண்பாடுகளின் பின்னணி

இலங்கையில் மதச் சகிப்பின்மை வளர்கிறது. எனினும், அதன் எழுச்சி மதத்தை விட வர்க்க நலன்களுடன் கூடிய உறவுடையது என்பது அரிதாகவே அடையாளங்காணப் பெறுகிறது. கொலனி ஆட்சிக் கீழ்க் கிறிஸ்துவ மிஷனரிகளின் மதமாற்றல் சிறிது பொதுசன மனக்கசப்பை ஏற்படுத்தியது. அது, 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் பௌத்த, சைவ மீளெழுச்சிகட்குக் காரணமாயிற்று. அம் மீளெழுச்சிகளின் முன்னோடிகள், அவர்களுடைய கிறிஸ்துவப் போட்டியாளர்களைப் போல, குறிப்பிட்ட உயர்வர்க்க நலன்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். வெவ்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் ஒப்பிடுகையில் இணக்கத்துடனேயே வாழ்ந்துவந்தனர். ஹீனாயான, மஹாயான பௌத்தப் பிரிவுகட்கிடையே இருந்துவந்த பகைமை, 20ம் நூற்றாண்டு வரை பௌத்தத்துக்கு எந்த மதத்துடனும் இருந்த முரண்களைவிடக் கடுமையானதென்பது குறிப்பிடத்தக்கது. பௌத்தப் பிரிவுகட்கிடையே இருந்துவந்த மோதல்களும், பெரும்பாலும், மதகுருமாரையும் அவர்களைச் சார்ந்தோரையுங்கொண்ட போட்டிப் பிரிவுகள் இராச சலுகைகட்காகப் போட்டியிட்டதன் விளைவுகளே.

எழுச்சிபெற்றுவந்த ஒரு சிங்கள பௌத்த முதலாளி வர்க்கத்தின் தேவைகட்கமையவே, மிஷனரிச் செயற்பாடுகட்கு எதிர்வினையான ஒரு அரசியல் சக்தியாக பௌத்தம் வடிவமைக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து கிறிஸ்துவ சமூகத்தைவிடப் பொருளாதாரத்திலும் கல்வியிலும் பினதங்கியிருந்த —ஆனால் எண்ணிக்கையிற் பெரிதான— கத்தோலிக்க கிறிஸ்துவ சமூகம் எச்சரிப்புடையதாயிற்று. டச்சு ஆட்சிக் காலத்தில் கடுமையான மதப் பாரபட்சத்துக்குட்பட்ட கத்தோலிக்க சமூகம், வத்திக்கானால் வழிநடத்தப்பட்ட, இடதுசாரி விரோதச்

சிந்தனையின் கோட்டையாயிருந்த கத்தோலிக்கத் திருச்சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தது. (எனினும், இலங்கையில் 1956க்குப் பின்பான விருத்திகளும் மாறிவந்த சர்வதேசச் சூழுலும் கத்தோலிக்கத் திருச்சபையைத் தனது பகிரங்க இடதுசாரி-விரோத நிலைப்பாட்டினின்று பின்வாங்கவைத்தன). 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நிகழ்ந்த பௌத்தர்களுடனான ஒரு மோதலையடுத்துக், கத்தோலிக்க சமூகம், பெரிதும் சிங்கள-பௌத்தர்களைக் கொண்டதொரு சூழலுக்குத் தன்னைத் தகவமைத்துக்கொண்டது. மேற்குக் கரைப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கர்களிற் பெரும்பாலோரைத் தமிழுக்குப் பதிலாகச் சிங்களத்தைத் தமது வீட்டுமொழியாக்குமாறு திருச்சபை தூண்டியது. தேசிய இனப் பிரச்சனை வலுப்பெற்றதையடுத்து, 1970களிலிருந்து கத்தோலிக்க சமூகம் மொழி அடிப்படையில் ஆழப் பிளவுண்ட போதும், மொழிப் பிரிப்பின் இரு தரப்பிலும் இருந்த கத்தோலிக்கர்கள் பிற மதத்தவருடன் சுமுக உறவுடனிருந்தனர். எனினும், குறிப்பாகச் சிங்களக் கத்தோலிக்கரிடையே, தேர்தல் அரசியலில் மதம் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளது.

புரட்டஸ்தாந்து கிறிஸ்துவர்களிற் பெருவாரியானோர் பிரித்தானிய ஆட்சியின்போது சுயமுன்னேற்றத்துக்காகக் கிறிஸ்துவர் ஆகியோராவர். எனவே, அரசியல் லாபத்துக்காகப் பௌத்தத்துக்கு மீள்வது அச் சமூகத்தின் தலைமை உறுப்பினர்கட்கு எளிதாக இருந்தது. புரட்டஸ்தாந்து சமூகத்தினரிடையே பெரியதொரு நடுத்தர வர்க்கப் பகுதி இருந்ததுடன் அதன் உயர் நடுத்தர வர்க்கத்தினர் நாட்டின் அலுவல்களிற் கணிசமான செல்வாக்குடையோராயிருந்தனர்.

பாடசாலைக் கல்வியைக் கிறிஸ்துவ மதமாற்றக் கருவியாகப் பயன்படுத்தியமை கல்வித் துறையிற் போட்டியைத் துண்டியது. நாடுபரவலும் பௌத்த, இந்துப் பாடசாலைகள் எழுந்தன. எனினும் அவை நகர்சார்ந்தோரின் தேவைகளையே நிறைவுசெய்தன. 20ம் நூற்றாண்டின் முன்-இடைப்பகுதி தொட்டு, சில தனியார் பாடசாலைகள் போக, அனைத்துப் பாடசாலைகளும் இலவசக் கல்வி வழங்குமுகமாக அரசாங்க உதவி பெற்றன. மிஷனரிப் பாடசாலைகள், கல்வி வழங்குவோர் என்ற தமது தகைமையை அரசியல் நோக்கங்கட்காகத் தொடர்ந்தும் பயன்படுத்தியதுடன் பாரபட்சமான நடைமுறைகளிலும் ஈடுபட்டன. அதன் பயனாக, அரசாங்க உதவிபெற்ற அனைத்துப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க நேர்ந்தது. எனினும், விரும்பின், எப் பாடசாலையையும் தனியார் பாடசாலையாகத் தொடர அனுமதித்த அளவில் அரசாங்கம் நியாயமாகவே நடந்துகொண்டது.

அத்துடன், அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகள், சலுகைகளைத் துஷ்பிரயோகம் செய்யாது தொடர்ந்தும் தமது மத அடையாளத்தைப் பேணவும் அனுமதிக்கப்பட்டன.

அந் நடவடிக்கையின் விளைவாக மிஷனரி நிறுவனங்களுடன், முக்கியமாகக் கத்தோலிக்கத் திருச்சபையுடன், ஏற்பட்ட மோதலில் அரசாங்கம் உறுதியாக நின்றது. கிறிஸ்துவ நிறுவனங்களுடனான அடுத்த பெரிய மோதல், பல ஆண்டுகள் கழித்து, எவாஞ்சலிஸ்ற் கிறிஸ்துவ ஸ்தாபனங்கள் மதமாற்றங்களை முன்னெடுத்ததையடுத்து நிகழ்ந்தது. கடந்த சில ஆண்டுகளில் கொழும்பு மாவட்டத்தில் பல கிறிஸ்துவ ஆலயங்கள் பௌத்த தீவிரவாதிகளாற் தாக்கப்பட்டன.

## முஸ்லிம்கள் மீள இலக்கான சூழல்

கணிசமான அளவில் நகர்சார் வணிகர்களையும் பெருந்தொையான கிராமிய விவசாயிகளையும் மீனவர்களையும் கொண்ட முஸ்லிம் சமூகத்தின் மேட்டுக்குடிகளோ நடுத்தர வர்க்கத்தினரோ, 1970கள் வரை, கல்வியிலும் பணிமனை உத்தியோகங்ளிலும் போட்டியிட்ட தம்மையொத்த நிலையிலிருந்த சிங்களவருடனும் தமிழருடனும் ஒப்பிடத்தக்க அளவிற்குக், கல்வியில் முதலிடவில்லை. வணிகத் துறையில் முஸ்லிம், இந்திய வணிகர்களின் ஆதிக்கத்தைச் சிங்கள வணிக சமூகம் வெறுத்தது. இலங்கையில் நாடளாவியமுறையில் நடந்த முதலாவது இனமோதலான, 1915இன் முஸ்லிம்-விரோத வன்முறையைத் துண்டுவதில் இப் போட்டி ஒரு நெம்பு-மையமாக இருந்தது. முஸ்லிம்களே அம் மோதலிற் பெரிதும் பாதிக்கப்பட்டோராய் இருந்த போதும், கொலனிய ஆட்சி முஸ்லிம்களுடன் நடந்துகொண்ட முறையை விடக் கடுமையாகச் சிங்களவர்களுடன் நடந்துகொண்டது என்ற சிங்கள மேட்டுககுடி நோக்கு, சிங்கள பௌத்த மனத்தாங்கலை ஆழமாக்கியது.

முஸ்லிம்கள் ஏகப்பெரும்பாலும் தமிழ்ப் பேசுவோராக இருந்தாலும், அவர்களின் சனப்பரம்பற் தன்மையும் அரசியற் காரணிகளும், வடக்கு-கிழக்கினதும் மலையகத்தினதும் தமிழரினின்று வேறுபட்ட தமக்கான ஒரு அடையாளத்தை வலியுறுத்துமாறு செய்தன. சிங்களவர்களின் நடுவே வாழ்ந்த முஸ்லிம்கள் சிங்கள மொழியறிவு உடையோராய் இருந்தபோதிலும், தமிழையே தமது தாய்மொழியாகப் பேணினர். அண்மைக் காலங்களில், தென்னிலங்கை முஸ்லிம்களிற் சிறிய, ஆனாற் குறிப்பிடத்ததக்க, தொகையினரைக் கல்வி மொழியாகவும்

சிலசமயம் ‘வீட்டு மொழியாகவும்’ சிங்களத்தைப் பயன்படுத்துமாறு கல்வித் தேவைகளும் வேலை வாய்ப்புக்களும் தூண்டியுள்ளன. எனினும், ஒரு காலத்திற் தமிழருடன் இயலுமாக இருந்தவிதமான சமூக ஒருமிப்பு சிங்களவருடன் ஏற்படுவதற்குத் தடையான காரணங்களுள் சிங்கள-பௌத்த தேசியம் முஸ்லிம்களைப் ‘பிறராக’ நோக்குவதும் அடங்கும். அண்மையிற் சிங்கள பௌத்தம் ஒரு அரசியற் சக்தியாக வெளிப்பட்டு குட்டி பூர்ஷுவாப் போட்டாபோட்டிகள் இனப் பகையைக் கிளறும் இயக்க விசையானதையடுத்து, இந்த அந்நியப்படல் வலுப்பட்டுள்ளது.

முஸ்லிம் வணிகர்கள், 1970களின் நடுப்பகுதியில் இரத்தினக்கல் வணிகத்திற் போல, தமக்குக் கிட்டிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தினர். மத்திய கிழக்கில் எல்லாச் சமூகத்தினரும் வேலைகளைப் பெற்றாலும், விகிதாசாரமாக அதிக முஸ்லிம்கள் பயனடைந்தனர். அதையொட்டி வளர்ந்த நுகர்வின் பயனான வாய்ப்புக்களை முஸ்லிம் வணிகர்கள் தமக்குச் சாதகமாக்கினர்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகளாவிய அரசியற் சக்தியாக உருவானதில் இரண்டு எதிரெதிரான அம்சங்கட்குப் பங்குண்டு. ஒன்று, சாதாரண மக்களின் மனக்குறைகளைக் கவனிக்கவும் முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக இழிவாக நடத்திய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்துநிற்கத் தவறிய முஸ்லிம் ஆளும் வர்க்கத்தின் மீதான நியாயமான கசப்புணர்வாகும். மற்றது, மத உத்வேகத்தால் உந்தப்பட்டதாகத் தெரியும் அதே நேரத்தில், ஏகாதிபத்திய நலன்கட்குப் பயன்படுமாறு அரபு ஆளும் வர்க்கங்களால் (குறிப்பாக சவூதி அராபியாவினவால்) இயக்கப்படும் ஒரு போக்காகும்.

சிங்கள பௌத்த நிலைப்பாடுகள், தென்னிலங்கை முஸ்லிம்களுக்கு அசௌகரியமாய் இருந்துள்ளன. முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் கால ஒழுங்கில் நிகழாவிடினும், அவை, முஸ்லிம்களைத் தமது மத அடையாளத்தை மேலும் வேகத்துடன் வலியுறுத்தத் தூண்டின. முஸ்லிம்களைப் பற்றிய தமிழ்த் தேசியவாதிகளின் (குறிப்பாகத் தமிழ்ப் போராளிகளின்) நிலைப்பாடுகளும், முஸ்லிம்களிடையே, தாம் தனித்துள்ளோம் என்ற உணர்விற்கு வலுவூட்டின. முஸ்லிம் அடிப்படைவாதிகள் இப் பாதுகாப்பின்மை உணர்வைத் தமக்கு வாய்ப்பாக்கி, முஸ்லிம் சமூகத்துள் ஊடுருவியுள்ளனர். வளர்ந்துவரும் படித்த நடுத்தர வர்க்கத்தினரிடையே, சவூதி அராபியாவின் செல்வ

வளத்தை மையப்படுத்திய ஒரு போலி அராபியப் பெருமிதம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், இத்தகைய அடிப்படைவாதத்தின் பிரதான விளைவு, மதச்சார்பற்ற விழுமியங்களை நிராகரித்தும் "மார்க்க விரோதிகள்" என அடையாளப்படுத்திய முஸ்லிம் மதப்பிரிவினரை —அடிக்கடி வன்முறையாகத்— தாக்கியும், முஸ்லிம் சமூகத்தைப் பிளந்தமையே யாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் துணிந்து நின்ற ஈரானியப் புரட்சி பற்றிய முஸ்லிம்களின் பெருமிதம் மங்குமளவுக்கு சுன்னி-ஷியா வேறுபாடுகள் அழுத்திப் பேசப்பட்டுள்ளன. பழமைவாத விழுமியங்களை முழுச் சமூகத்தின்மீதும் திணிக்க விழையும் இஸ்லாமியவாதச் செயற்பாட்டாளர்கள் மதச்சார்பற்ற விழுமியங்களை ஏற்பவர்களும் ஊழல் மிக்க சவூதி அராபிய ஆட்சியாளர்களையும் பிற அரபு வளைகுடா 'எண்ணெய் ஷேக்குகளையும்' விமர்சிப்பவர்களுமான முஸ்லிம்களை மிரட்டிவருகின்றனர். இவற்றுள் எதுவும், சிங்கள-முஸ்லிம் உறவுகளுடன் எத் தொடர்புமுடையதல்ல.

## முஸ்லிம் விரோத அமைப்புக்களின் எழுச்சி

விடுதலைப் புலிகட்கெதிரான போரின் தொடக்கத்தில், சிங்கள-பௌத்தம் தனது முஸ்லிம் விரோத அரசியலை அடக்கிவாசித்தது. உண்மையில், யூ.என்.பி. அரசாங்கம், கிழக்கின் முஸ்லிம்களைத் தமிழருக்கெதிராகத் திரும்புமாறு ஊக்குவிக்குமளவுக்குப் போனது. அப்போது, முஸ்லிம்களை நடுநிலைப்படுத்துவது சிங்களப் பேரினவாத வேலைத்திட்டத்துக்கு முக்கியமாயிருந்தது. 1990இல் முஸ்லிம்களை வடக்கிலிருந்து விரட்டியதன் மூலம் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களைப் பகைத்தபின்பு, சிங்கள-பௌத்த இனவாதிகளில் ஒரு பகுதியினர் மேற்கொண்டு முஸ்லிம்களுடனான இணக்கம் தேவையில்லை என எண்ணினர். இந்நூற்றாண்டின் தொடக்க முதலாக முஸ்லிம் வணிக நிறுவனங்கள் ஒழுங்காகத் தாக்கப்பட்டுள்ளதுடன் அரசினதும் படையினரதும் துணையுடன் முஸ்லிம்களிடமுள்ளள காணிகளுக்கு உரிமைகோரப்படுகிறது. அரபு நாடுகட்குச் செல்லும் பணிப்பெண்களின் துன்புறுத்தலின் அதிகரிப்பும் (பாதிக்கப்பட்டோரில் முஸ்லிம் பெண்களும் அடங்குவரெனினும்) முஸ்லிம்கட்கு எதிரான உணர்வுகட்குத் துணையாகவுள்ள இன்னொரு விடயாகும்.

பொது பல சேன, சிங்கள-பௌத்தத்தின் எழுந்தமான விளைவல்ல. அது, தனக்கொரு பௌத்த அடையாளத்தை ஏற்றுக், கூச்சமற்ற

சிங்கள-பௌத்தப் பேரினவாத வேலைத்திட்டத்தை வகுத்து, ஜாதிக ஹெல உருமயவாக வடிவெடுத்த சிஹள உருமயவின் போர்க்குணங் கொண்ட நீட்சியாகும். இதற்கு அரசின் அதி உயர் மட்டங்களில் ஆதரவும் பாதுகாப்பும் உள்ளதாகக் கூறப்படுகிறது. அதன் உறுப்புரிமை பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினரைக் கொண்டதாக உள்ளதுடன் உள்நாட்டிலும் வெளியிலும் சிங்கள-பௌத்தத் தீவிரவாதிகளை அது வெகுவாகக் கவர்ந்துள்ளது. பொது பல சேன ஒரு நவ-ஃபாசிச அமைப்பாகும். இந்தியாவில் இந்துத்துவத்துக்கு ஆர்.எஸ்.எஸ். ஏவ்வாறோ அவ்வாறே இலங்கையில் சிங்கள-பௌத்தத்துக்கு பொது பல சேன எனலாம். வேறுபாடு ஏதெனின், ஆர்.எஸ்.எஸ். அதன் அரசியற் கரத்திற்கு முந்தி வந்தது என்பதும் ஆர்.எஸ்.எஸ். பொது பல சேனவை விடச் சீராக அமைக்கப் பட்டுள்ளனது என்பதுமாகும்.

பொது பல சேனவும் அதன் நேச அமைப்புக்களான சிஹல ராவய போன்றனவும், தமது வெறுப்புச் செய்தியைப் பரப்ப, முன்னேறிய முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஊடகவியலாளர் சந்திப்புக்கள், இணையத் தளம், மின் ஊடகங்கள் போன்றவற்றைப் பாவித்து, இவ்வருட முற்பகுதியில், 15,000 பேர் பங்குபற்றிய கூட்டமொன்றைக் கொழும்புக்கு அண்மிய மஹரகமவில் பொது பல சேன நடத்தியது. அவர்களுடைய பிரசாரம் ஏதெனில், சிங்கள-பௌத்தர்கள் பெரும்பான்மைச் சமூகத்தினராக இருந்தும், தமது உரிமைகளையும் விழுமியங்களையும் அடையாளத்தையும் காப்பாற்றத் தமது எதிரிகளுடன் போராடவேண்டிய, மிரட்டலுக்குட்பட்ட ஒரு சமூகமாவர் என்பதாகும். சிங்கள-பௌத்தப் பேராளிகள், இடைவிடாது, முஸ்லிம் ஆடையலங்கார நெறிகளை இழிவுபடுத்தியும் முஸ்லிம் ஆடைகளை அணிவோரைத் தொல்லைப்படுத்தியும் முஸ்லிம் விரோதச் சுவரொட்டிகளை எழுப்பியும் பொது இடங்களில் முஸ்லிம் விரோதத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் முஸ்லிம் மதநம்பிக்கைகளைப் பகிரங்கமாக நிந்தித்தும் வந்துள்ளனர். 2001இல் மலையகத்தில் மாவன்னல்லையில் ஒரு பள்ளிவாசல் கொடுமையாகத் தாக்கப்பட்ட பின்பு, கடந்த சில ஆண்டுகளில், பள்ளிவாசல்கள் மீண்டும் தாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் விரோத நிகழ்வுகள் 2013 ஜனவரியில் 21 ஆக இருந்து மாச்சில் 54 ஆக உயர்ந்தன. பெரும்பாலான தாக்குதல்கள், கிராமப்பகுதிகளிலன்றிச் சிங்கள-பௌத்த ஃபாசிசத்தின் விளைநிலங்களாயுள்ள கொழும்பு, கண்டி, குருநாகல் மாவட்டங்களின்

நகர்ப்பகுதிகளிலேயே நிகழ்ந்தன. அரசாங்கம் இச் செயற்பாடுகளைக் கண்டிக்கவுமில்லை, அவற்றைத் தடுக்கச் செயற்படவுமில்லை.

## முஸ்லிம்களைப் பொறியில் விழுத்தல்

இஸ்லாமியக் கோட்பாட்டாளர்களின் உச்ச அமைப்பான அகில இலங்கை ஜமாயத்துல் உலாமா (உலாமாக்கள் சபை), ஒட்டுமொத்த, சில்லரை இறைச்சி விற்பனையாளர்களிடம் கட்டணம் வாங்கி ஹலால் சான்றிதழ்களை வழங்கியது. அதன் மூலம், ஜேர்மன் ∴பாசிசவாதிகள் யூதர்களைச் எவ்வாறு சித்தரித்தார்களோ அவ்வாறே முஸ்லிம்களைச் சித்தரிக்க ∴பாசிச பொது பல சேன பார்த்திருந்த ஒரு வாய்ப்பை உலாமாக்கள் சபை அதற்கு வழங்கியது.

வேகமாக வளரும் முஸ்லிம் சந்தையில் இறைச்சியையும் இறைச்சிப் பண்டங்களையும் விற்றுத்தள்ளப், (சுப்பர்மாக்கற் எனும்) பேரங்காடிகட்கும் மத்திய கிழக்கிற்கு இறைச்சியை ஏற்றுமதி செய்வோர்க்கும் ஹலால் முத்திரை தேவைப்பட்டது. இஸ்லாமிய வழிநடப்பவர்களும் விசுவாசிகளுமான முஸ்லிம்கள் பலர், சான்றிதழ் வழங்குவதற்கான முறைகளைக் கேள்விக்குட்படுத்தியதுடன் சான்றிதழ் வழங்குதலை அற அடிப்படையில் எதிர்த்துமுள்ளனர். எவ்வாறாயினும், ஹலால் முத்திரையானது முஸ்லிம்களல்லாதோர்மீது ஹலால் இறைச்சியைத் திணிக்கும் நடைமுறையென பொது பல சேன வாதித்தது. இது உண்மைக்குப் புறம்பானதெனினும், உலாமாக்கள் சபை, உறுதியாக நின்று ஹலாலின் கருத்தையும் அதன் பலாபலன்களையும் விளக்குவதைத் தவிர்த்து, உடனடியாகப் பின்வாங்கி, உள்நாட்டில் விற்கும் இறைச்சிக்கு ஹலால் முத்திரை வழங்குவதை நிறுத்த உடன்பட்டது. முஸ்லிம்களிடையே உலாமாக்கள் சபையின் நம்பகத்தைக் கெடுத்த இந் நகர்வைச் சிங்கள-பௌத்தக் கடும்போக்காளர்கள் தமது வெற்றியாகக் கண்டனர்.

## முஸ்லிம் விரோத வெறியாட்டம்

இவ் வெற்றி, பொது பல சேனவுக்கும் அதன் தோழமை அமைப்புக்கட்கும் முஸ்லிம் வணிக நிறுவனங்களைத் தாக்குவதற்கான பெரும் ஊக்குவிப்பாயிற்று. மாச் 28ம் திகதி, கொழும்பிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலான பப்பிலியானவிலுள்ள சுனேத்ராதேவி பிரிவேன ஆலயத்திற் திரண்ட ஒரு கும்பல், முஸ்லிம் உடைமையான “எமரல்ட் ற்ரேடிங்” என்ற வணிக நிறுவனத்தின் பாரவாகனசாலை மீது கல்லெறிந்தது. வாகனசாலையில் இருந்த அனைத்து வாகனங்களும்

உபகரணங்களையும் தாக்கி அலுவலகத்திற்கும் தீ மூட்டியதில் 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சேதம் விளைந்தது.

இந் நிலையில், மேலும் வெறிகொண்டதாகி, புத்த பிக்குக்களின் தலைமையில் நூற்றுக்கணக்கானோரைக் கொண்டதாக வளர்ந்த கும்பல், முஸ்லிம் உடைமையான "ஃபஷன் பக்" என்ற முன்வரிசை ஆடை விற்பனைத் கடைத் தொடரின் பண்டகசாலையையும் விற்பனை நிலையத்தையும் தாக்க முற்பட்டது. "ஃபஷன் பக்" ஊழியர்களைத் தாக்கிய கும்பல், ஊடகவியலாளர்களையும் தொல்லைப்படுத்திக் கட்டிடத்திற்கும் விற்பனைப் பொருட்களுக்கும் வாகனங்கட்கும் சேதம் விளைத்தது. பி.பி.சி., ஏ.எவ்.பி. ஆகிய ஐரோப்பிய ஊடகங்கள், முஸ்லிம் உடைமையான கடையைக் கும்பல் தாக்குகையில் பொலிஸ் கைகட்டி நின்றதாகச் செய்தி தெரிவித்தன. தலத்தில் எவரும் கைதாகவில்லை. இது திட்டமிட்டு நடந்த தாக்குதல் என்பது தெளிவு.

இந்த நிகழ்விற்கு, எதிர்பாராதவாறு, மின்னூடகங்கள் வழங்கிய விளம்பரத்தால், மாச் 29ம் திகதி வீடியோ பதிவில் காணப்பட்ட பிக்குக்கள் உட்படச் சந்தேகத்துக்குரிய பலர் தாமாகவே பொலிஸில் சரணடைந்தனர். தனக்கு எவ்விதமான தொடர்புமில்லை என மறுத்த பொது பல சேன, குற்றவாளிகளைத் தண்டிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியது. எனினும், சந்தேகத்துக்குரியோரை நீதிமன்றத்திற் தோற்றுவித்தபோது, "ஃபஷன் பக்", சந்தேகத்துக்குரியோரை விடுவிக்குமாறு மன்றாடியதுடன் அவ் விடயத்தைத் தான் மேலுந் தொடராது என்றும் அறிவித்தது. சம்பந்தப்பட்ட விடயம், சட்டமும் ஒழுங்கும் பற்றிய பாரிய பிரச்சனையாக இருந்தும், "ஃபஷன் பக்" எடுத்த நிலைப்பாட்டை ஏற்பது பொலிஸுக்கும் நீதவானுக்கும் மகிழ்வாகவே இருந்தது. நிராதரவான நிலையிலிருந்த முஸ்லிமான நீதி அமைச்சர் ரவூஃப் ஹக்கிம், விடயத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு "ஃபஷன் பக்" உரிமையாளர் வற்புறுத்தப் பட்டதாகவும் சட்டத்தின் ஆட்சிக்குச் சவால் விடப்பட்டுள்ளதாகவும் பி.பி.சி.யிடம் கூறினர்.

இதன் பாடங்கள் தெளிவானவை: முஸ்லிம் வணிக சமூகத்தை சிங்கள-பௌத்த ஃபாசிஸ சக்திகள் வெற்றிகரமாக அச்சுறுத்தியுள்ளன. முஸ்லிம்கட்கெதிரான பேரினவாத வன்முறை சார்ந்த விடயங்களில், அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட்ட முஸ்லிம் அரசியற் தலைமைகளுக்கு அற்ப அதிகாரமும் இல்லை. முஸ்லிம்-விரோதத் தீவிரக் கும்பல்கட்கெதிராக முறையிடுவது சமூகப் பொறுப்பற்ற

செயலாகலாம் என்று பொலிஸ் தனது நடத்தை மூலம் முஸ்லிம்கட்குச் சாடை காட்டியுள்ளது. இதிற் பெரும்பகுதி, நாற்ஸி ஜேர்மனியில் இரண்டாம் உலகப் போருக்கு முந்திய காலத்தை நினைவூட்டியதெனில், அதற்கு மேலாகவும் வரவிருந்தது.

## சனநாயகத்துக்கு ஆபத்து

பொது பல சேன பௌத்த விழுமியங்களை வக்கிரப்படுத்துவது கொழும்புவாழ் சிங்கள-பௌத்தர்களிற் கணிசமான பகுதியினருக்கு அலுத்துவிட்டது. 2013 ஏப்ரல் 13ம் திகதி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடிவெடுத்து மெழுகுதிரி இரா விழிப்பிற்காக அவர்கள் திரண்டனர். அவர்கள் மெழுகுதிரிகளை ஏற்ற ஆயத்தமானபோது, பொலிசார், தேசிய கீதத்தில் ஒரு மாற்றத்தை ஊக்குவிப்பதற்காகவே அவர்கள் கூடியுள்ளனர் என்ற பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து, எதிர்ப்பாளர்களிற் சிலரைப் பிடித்துச் சென்று மறு நாளே விடுவித்தனர். அதேவேளை, பொது பல சேன கூட்டமே மோசமாக நடந்தபோதிலும், பொலிஸ், முற்றாகவே பொது பல சேன பக்கம்நின்று, “குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக” எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தது.

பொலிசும் அரசாங்கச் சார்பான தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றும், எவ்வித ஆதாரமுமின்றி, பொது பல சேனவின் வியாக்கியானத்தை நம்பகப்படுத்தின. மெச்சத்தக்கவாறு, தனியார் ஊடகங்களில் ஏனையவை தமது தகவல் வழங்கலிற் கூடிய சமநிலை நாட்டின. அதே வேளை, அரசாங்க ஊடகங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்.ஜி.ஓ. நிதியுடன் நடந்தாகக் கருதத் தூண்டுமளவுக்குச் சென்றன.

பக்கச்சார்பான பொலிஸ் பாதுகாப்புடன் நடக்கம் பொது பல சேன மிரட்டலுக்கு முன்னே இத்தகைய எதிர்ப்புக்கள் போதிய தொகையிலும் வலிமையுடனும் மீள நிகழ்வது கேள்விக்குரியது. எனினும், இன்று அமைதிக்காகவும் சனநாயகத்துக்காகவும் நீதிக்காகவும் எழ மக்கள் துணிகின்றனர் என்றளவில், இவ் ஆர்ப்பாட்டம், தன்னளவில், ஒரு நல்ல குறியாகும்.

மேலும் பெரியதொரு மக்கள் பிரிவை அணிதிரட்டி எதிர்ப்புக்களை விடுதலைக்கும் சனநாயகத்துக்குமானதாக மாற்றுவதற்கு வெகு தூரமுள்ளது. மேற்குலகு தவறான காரணங்கட்காகப் பழிவாங்குகிற இந் நாட்டை அதன் அரசாங்கம் காத்துநிற்கிறது என்றும் —எத்தனை தான் தவறுகள் இருந்தாலும்— பொது பல சேன போன்ற சக்திகளே

முஸ்லிம்கள், தமிழ்ப் பிரிவினைவாதிகள், மேற்குவயப்பட்ட சிங்களவர்கள், என்.ஜி.ஓ.க்கள், தேசப்பற்றற்ற பிற சனத்தொகையினர் ஆகிய உள் எதிரிகளிடமிருந்து இந் நாட்டை வெற்றிகரமாகக் காத்து நிற்கின்றன என்றும் மயங்கியுள்ள ஒரு பெரும்பான்மையை வேறுவிதமாக நம்பவைப்பது எளிதல்ல.

ஏந்த இஸ்லாமிய அரசும் —முக்கியமாக சவூதி அராபியாவும் அதன் கூட்டாளிகளும்— தமக்கு உதவ முன்வரமாட்டார்கள் எனவும் முஸ்லிம் தலைவர்களும் பெருவணிகர்களும் தமது இருப்பைத் தக்கவைக்கப் பொது பல சேனவுடனும் பிற ஃபாசிசப் பிரிவினருடனும் இணங்கிப் போவாவார்கள் எனவும் முஸ்லிம் வெகுசனங்கள் விரைவில் உணர்வார்கள். யூத வணிகர்களும் அரசியல்வாதிகளும் அவ்வாறு நடந்துகொண்டதை ஜேர்மனியில் நாற்ஸிகளின் எழுச்சியின் போது உலகம் கண்டது.

ஏந்தளவிற்கு யுதர்கள் நாற்ஸிகளின் இறுதி இலக்காக இருக்கவில்லையோ, அந்தளவிற்கு முஸ்லிம்கள் பொது பல சேனவினதும் அதையொத்த சக்திகளதும் இறுதி இலக்குக்களல்லர். பொது பல சேன கிளப்பிவிடும் இத்தகைய திசைதிருப்பல்கள் உண்மையான பிரச்சனைகளிலிருந்து சிங்கள வெகுசனங்களின் கவனத்தை விலக்கும் அளவிற்கு அவை அரசாங்கத்துக்குப் பொருந்தி வருகின்றன. ஈற்றில் பொது பல சேனவினது பாதையும் அரசாங்கத்தினது அல்லது அரசாங்கத்தில் ஆதிக்க நிலையிலுள்ள பகுதியினது பாதையும் ஏகாதிபத்தியத்துடன் சமரசமும் நாட்டில் சனநாயகத்தின் அழித்தொழிப்பும் என்ற புள்ளியில் ஒன்றுபடும். இதைப்பற்றி ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மட்டுமன்றிச் சனநாயக, முற்போக்குச் சக்திகளும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

***[New Democracy 48 இதழில் வந்த ஆங்கிலக் கட்டுரையைச் சார்ந்து தமிழில் வரையப்பட்டது.]***

*****

# தமிழிலே தொடர்பாடல்:
## இன்று நாம் எதிர்நோக்கும் சில பிரச்சனைகள்

*பேராசிரியர் சி. தில்லைநாதன்*

மனித வாழ்வு செவ்வனே அமைவதற்குத் தொடர்பாடல் இன்றியமையாததாகும். பொதுத் தொடர்புகள் ஏற்ற முறையில் அமையாதவிடத்துப் பல குழப்பங்களுக்கு அது காரணமாகலாம். மனிதர் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளவும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்த்த சாதனம் மொழியாகும், அது செய்திகளைப் பரிவர்த்தனை செய்வதற்கான சாதனமாக மட்டுமின்றி சமுதாயத்தை உருவாக்கும் சக்தியாகவும் வளர்ந்து முக்கியத்துவம் பெற்றுள்ளது. சமுதாயப் பிராணியான மனிதன் குழந்தைப் பருவம் முதலே தொடர்புகொள்ள விழைகிறான், ஒவ்வொன்றையும் அறிந்துகொள்ள எத்தனித்தல் மனித இயல்பு என்பர். மொழியினை, தெய்வத்தினால் தோற்றுவிக்கப்பட்டு பக்திசெய்து காத்துவளர்த்திடக் கிடப்பதாக அன்றி, சமூக தொடர்பாடலுக்கான சாதனமாக நோக்குதல் வேண்டும்.

காலத்தின் தேவையை நிறைவு செய்யக்கூடிய வகையில் எமது மொழி வளர்க்கப்படுவதும் கையாளப்படுவதும் அவசியமாகும். காலப்போக்கில் எம்மைச்சூழ நிகழும் மாறுதல்களால் பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாததாகும். ஒரு மொழியின் சொற்களஞ்சியம் அதனை உபயோகிப்பவர்களின் சமூகத் தேவைகளைப் பொருத்ததென்பர். சஹாராப் பாலைவனத்தில் வசிக்கும் மக்களிடை அறுபது புல்லின மரங்களைக் குறிக்கும் சொற்கள் வழங்கிய போதிலும், பனிக்கட்டியைக் குறிக்கும் சொல் ஒன்றும்

இல்லை. புதியவற்றை வெளியிடும் தேவை ஏற்படுமிடத்து அதற்கேற்ப சொற்கள் தோன்றும்.

புராதன கால மக்கள் பாதுகாப்பு, உணவு, இன உற்பத்தி போன்றவை குறித்தே அக்கறை கொண்டவர்களாகவும் ஓய்வுநேரம் அதிகம் உள்ளவர்களாகவும் இருந்தனர். ஒரு காலத்தில் கல்விப்பொருள் சுருங்கியதாகவும் மனப்பயிற்சியிலே தங்கியதாகவும் இருந்தது. அதுமட்டுமன்றிக் கல்வி அறிவு, குறிப்பிட்ட குடும்பத்தாருக்கும் வர்க்கத்தாருக்கும் உரியதாகக் கருதப்பட்டது. இன்று உலகு விரிந்து கல்விப்பொருள் பெருகிவிட்டது. கருவறையிலிருந்து கல்லறைவரைக்கும் அனைவருக்கும் கல்வி, கல்வியிற் சமவாய்ப்பு, தொழிற்கல்வி என்றெல்லாம் பேசுகிறோம். இந்நிலையில் அத் தேவைகளை நிறைவேற்றத்தக்க சாதனமாக மொழி அமைய வேண்டியது அவசியமாகும்.

தொடர்பாடல் என்றால் பொதுவாக்கல் அல்லது பகிர்ந்து கொள்ளல் என்று பொருள் படும். ஒருகாலத்தில் உணவு, இணைவிழைச்சு, பாதுகாப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் சம்பந்தமான அனுபவங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இன்னொரு காலத்தில் தெய்வங்களையோ அரசர்களையோ போற்றுவதற்கு ஏற்ற வகையில் மொழி வளர்ந்திருக்கலாம். ஆனால், பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலம் இது. இக்காலத்தில் மக்கள் வாழ்க்கை முன்னேற்றுவதற்கு பெரிதும் உதவக்கூடிய மொழியின் ஆற்றலை நாம் தக்கவாறு உணர்ந்துள்ளோமா? ஒன்றை அறியவும் தெளிவுபடுத்தவும் ஒருவரை உடன்படுத்தவும் உதவும் மொழி ஒரு சக்தியாகும். அது ஏலவே இருப்பதொன்று என்று அசட்டை செய்வது சாலாது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம் என்று சொல்லிவருகிறோம். ஆனால் விஞ்ஞானக் கருத்துக்களை விளக்கும் இலாவகம் தமிழுக்கு எவ்வளவு தூரம் வாய்ந்துள்ளது? முப்பதாண்டுகளுக்கு முன் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி தாய்மொழியிலே நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சமீபத்தில் விஞ்ஞானத் துறைகளிலான கல்வி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் நடைபெற்றாலும், கல்லூரிகளில் தமிழிலே நடைபெறுகிறது. தாய்மொழி மூலம் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தியவர்கள், இக்கால அறிவு

மக்கள் மத்தியில் சுவறவேண்டும் என்பதையே பிரதான குறிகோளாய்க் கொண்டிருந்தனர்.

ஆனால், படித்த பலரிடம் கருத்துக்களை வழுவின்றித் தெளிவாக வெளியிடும் மொழிவளம் குறைந்துவருவதை மாணவ விடய ஆக்கங்களையும் பரிட்சை விடைத்தாள்களையும் மதிப்பிடும்போது அவதானிக்க முடிந்தது, முற்காலத்தில் விடயம் செவிவழியாகக் கேட்டு மனனஞ் செய்யப்பட்டது. ஆனால் இன்று வரிவடிவு எழுத்துமூல வெளியீடு முக்கியத்துவம் பெற்றுவிட்டது, வெளிப்படுவதோடு அமையாது எழுத்தில் பாதுகாக்கப்படத் தக்கதாய் இருப்பதே மனித மொழியின் சிறப்பாகும். சாதாரண மனிதர் ஒவ்வொருவராலும் சாப்பிடவோ தூங்கவோ முடிவது போல் பேசவும் முடியலாம். ஆனால், எழுதுவதற்கு திறன் வேண்டும். மனித குலம் சுமார் நூறாயிரம் வருடங்களாகப் பேச்சுத்திறன் பெற்றிருந்த போதிலும் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளாகவே எழுதுமாற்றலை வளர்த்துள்ளது. எமது பண்பாட்டுப் பெருமைக்கு இன்று முக்கிய சான்றாக விளங்குவன எழுத்தில் உள்ளவையே. தொடர்பு கொள்பவர் எதிரில் இல்லாததும் மனித நினைவாற்றலில் தங்கியிருக்காததுமான தொடர்பு எழுத்துமூலம் நடைபெறுகிறது. அது மயக்கத்துக்கிடமற்ற வகையில் தெளிவாக அமைய வேண்டியது அவசியமாகிறது. அச்சு வாகனத்தால் ஏற்பட்ட புரட்சிகர மாற்றத்தால் மொழியில் எழுத்துவடிவம் பாரிய முக்கியத்துவம் பெற்றுவிட்டது. எம்மைச் சுற்றி ஏராளமான புத்தகங்களும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் உள்ளன.

இந்நிலையில், எழுத முடியாதோர் அறியாதாரே ஆவர் என்று கொள்ளப்படலாம். செம்மையாகத், தெளிவாக எழுதுவதென்பது இலேசான காரியம் அன்று. ஆனால் எழுத்தாற்றல் மிக அவசியமான ஒன்றாக இன்று விளங்குகிறது, விஞ்ஞானம், சட்டம், பொறியியல், கல்வி, வர்த்தகம், வைத்தியம் முதலான துறைகளுக்குள் எதிலே பணியற்றூபவராயினும் கடிதங்களையோ குறிப்புக்களையோ அறிக்கைகளையோ எழுத வேண்டியவரே ஆவர். வாசிப்பவர்களை எமாற்றாத வகையில் நேர்மையுடனும் மயக்காத வகையில் சுருக்கமாகவும் அலுப்பூட்டாத வகையிலான வசனங்களில் எழுதவேண்டியது இன்றைய தேவை என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

இன்றைய தேவைகளைச் செவ்வனே நிறைவேற்றவல்ல கருவியாக தமிழை வளம்படுத்த வேண்டும் என்பது ஒரு புறமாக, மயக்கம் தராத

வகையில் வழுவின்றித் தெளிவாக எழுதமுடியாத நிலையில் பலர் இருப்பது விசனத்துக்கு உரியதாகும். அப் பிரச்சனைக்குரிய காரணங்களைப் பற்றி ஆலோசித்தல் பயனுடைய காரியமாகும்

இளந் தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதென்றும். புத்தகங்களும் சஞ்சிகைகளும் இலேசில் வாங்கமுடியாதளவுக்கு விலையேறிவிட்டன என்றும் கூறப்படுகின்றது. வியாபாரிகள் வேகமாகவும் சுலபமாகவும் விற்பனையாகும் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் தருவிப்பதால், தரமான நூல்கள் கிடைப்பது அரிதாக உள்ளதென்பதும் உண்மையே. பாடப் புத்தகங்களில் பாடப்பரப்புக்கள் மிகுதியானவையாக இருப்பதால் மொழிப் பயிற்சிக்கோ கவனிப்புக்கோ வேண்டிய அவகாசம் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. அதேவேளையில், மொழிகற்பிக்கும் திறனுள்ள ஆசிரியர்கள் போதியளவில் இல்லை என்ற குறையும் உளது. மொழியுணர்வும் பற்றும் குறித்து நீண்ட காலமாகப் பேசிய பின், தாய்மொழி மூலக் கல்வி மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற பின், தமிழைச் செவ்வனே எழுதுவதற்குப் பயிற்சியளிக்கவல்ல ஆசிரியர் பற்றாக்குறை பற்றிப் பேசும் நிலையில் உள்ளோம், அதே வேளையில், தொலைகாட்சி பார்க்கும் பழக்கம் அதிகரிக்க அதிகரிக்க வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் குறைந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அரசியற் பொருளாதார ஆதிக்கம் மிகுந்தவர்கள் உயர்ந்த பதவிகளைப் பெறுவதற்கும், "யாதும் ஊரே" என்று பலவிடங்களுக்கும் பெயர்வதற்கும் வாய்ப்பளிப்பனவாகலாம். இன்றைய உலகில் அரசியற் பொருளாதாரச் செல்வாக்குக் குறைந்த தமிழ் போன்ற மொழிகளைப் பேசும் மக்கள் பலர் தம் மொழிகளை நன்கு பயில்வதில் ஆர்வம் குறைந்தவர்களாகவும் உலகாதிக்கம் வாய்ந்த மொழிகளை நாடுபவர்களாகவும் இருக்கலாம்.

அது எவ்வாறாயினும், தமிழில் நன்கு தொடர்பாட முனைவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளே எமது கவனத்துக்கு பிரதானமான உரியவை, இலக்கணத்தைக் கவனமாகப் படிப்பவர்கள் இலக்கணப் பிழையின்றி எழுதுவார்கள் என்று சிலகாலத்துக்கு முன்னர் வரை கருதப்பட்டது. ஆனால், இலக்கண விதிகளை உருப்போடும் மாணவர்கள் இலக்கண பாடத்தில் நிறையப் புள்ளிகளைப் பெற்ற போதிலும், வழுவின்றித் தெளிவாக எழுதமுடியாதவர்களாக இருந்ததை

நடைமுறையிற் கண்டோம். இலக்கண அறிவு நடைமுறை மொழிப் பயன்பாட்டுக்கு உத்தரவாதமாகாது என்பதை அறிந்தோம்.

கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக மொழியியல் துறை மதிப்புக்கும் மோகத்துக்குரிய ஒன்றாக வளர்ந்து வருகிறது. மொழியின் தோற்றம், வளர்ச்சி குறித்த ஆய்வுகளும் ஒப்பியல் ஆய்வுகளும் வரலாற்றிலக்கண ஆராய்ச்சிகளும் பிரதேச வழக்குகளைப் பற்றிய ஆய்வுகளும் பெருகியுள்ளன. தமிழில் வினைச்சொல், தமிழில் பெயர்ச்சொல் என்ற ரீதியிலும் பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. மொழிக் கல்வியிலும் பாடப்புத்தகங்களை ஆக்குவதிலும் மொழியியலாளர்கள் மிகுதியாகப் பங்குபற்றினர். ஆயினும், தமிழில் தெளிவாகவும் சரளமாகவும் இக்கால விடயங்களை எழுதும் திறனை வளர்த்தல் துன்பமாகவே உள்ளது. இன்னமும் எமது இலக்கணக்காரர் மீதே பழிபோடும் நிலையில் உள்ளோம்.

நவீன அனுபவங்கள் நமக்கு ஆங்கில மொழி மூலமாக அனேகமாகக் கிடைத்தன. அவற்றைத் தமிழில் வெளியிடுபவர்களும் ஆங்கிலங் கற்றவர்களாகவே இருந்தனர். அவர்கள் ஆங்கிலச் சொற்களைக் கலந்ததோடு வசனங்களையும் ஆங்கிலமொழி வழியமைப்பில் எழுதினர். சம்ஸ்கிருதச் சொற்கள் அளவுக்கதிகமாகக் கலந்ததை எதிர்த்து தனிதமிழ் இயக்கம் தோன்றியதை அறிவோம். அதன் விளைவாக சம்ஸ்கிருதச் சொற்களை முற்றாகத் தவிர்க்கவேண்டும் என்ற வேட்கை எழுந்தது. சம்ஸ்கிருதம் தமிழ் மொழி வளர்ச்சியை எவ்வறு பாதித்தது என்பது ஆராயப்பட வேண்டியது. இன்று பலர் சாதாரண் தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களையே வெகு உற்சாகமாகக் கலந்தாள்கிறார்கள். பலர் ஆங்கிலத்திலே சிந்திப்பதால் அவர்கள் எழுதுவதை ஆங்கிலம் அறிந்தவர்களே ஓரளவு ஊகித்து விளங்கிக் கொள்ளமுடியும். அவர்கள் ஆளும் சில சொற்களின் பொருளை விளக்க வேண்டுமாயின், அவை ஆங்கிலத்தில் எச் சொற்களைக் குறிப்பன என்பதை முதலிற் கண்டுபிடிக்கவேண்டும். இந்நிலை தமிழிலே தொடர்பாட உசிதமானதன்று.

கலைச்சொற்களைப் பொறுத்தவரை பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே உள்ளன. தூய தமிழ்ச் சொற்களைத் தேடும் ஆர்வம், மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரக்கூடிய எழுத்துக்கள் பற்றிய நிலை, தமிழில் இல்லாத சில ஒலிகளை ஏற்பது— இவை சம்பந்தமான ஒருமுகப்பாடு வேண்டப்படுகிறது. ஒன்றையே குறித்து

ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் வழங்கின்றன. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெவ்வேறு சொற்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து, அநேக கலைச் சொற்கள் வெறும் அடையாளக் குறிகளாகச் சப்பென்று தோன்றுகின்றனவேயன்றி சிந்தனையைச் சுண்டிவிடுவனவாக இல்லை.

ஒருமுகப்பாடின்மை குறிப்பிடத்தக்களவு குழப்பத்துக்குக் காரணமாகவுள்ளது. அரச விளம்பரங்கள், அறிக்கைகளிலேயே ஒரே ஆங்கிலப் பதத்திற்கு பல்வேறு தமிழ்ச் சொற்கள் கையாளப்படுகின்றன, ஒரளவு வழக்கில் வந்துவிட்ட சொற்களுக்குப் பதிலாகக் கூடப் புதிய சொற்கள் கையாளப்படுகின்றன. வழக்கு, தொடர்ச்சி, விளக்கம் என்பவற்றைப் பேணுவதிலும் பார்க்கத் தங்கள் கெட்டித்தனத்தை (ஏலவே சொல்லப்பட்ட விதத்திலிருந்து வித்தியாசமாகச் சொல்வது கெட்டித்தனம் என்று கருதப்படுகிறது) காட்டுவது சிலருக்கு முக்கியமாகத் தோன்றுகிறது. கூட்டுத்தாபனம் என்ற சொல் பெருவழக்கான பின் தொகுப்பகம், யாப்பகம் போன்ற சொற்களும் அதே பொருளில் வழங்கப்படுகின்றன.

ஒலிவடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்ட இலக்கணங்களில் கூறியவாறு குறில், நெடில், குற்றியலுகரம், குற்றியலிகரம், மகரக்குறுக்கம், அளபெடை முதலானவற்றைக் கற்பிப்பதில் எவ்வளவு காலத்தைச் செலவிடலாம் என்பதையும் இன்றைய தேவைகளுக்கு ஏற்றவாறு தெளிவாக எழுதப் பயிற்ற எவ்வழிமுறைகளைக் கையாளலாம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஓசை விகற்பங்களுட் பலபொருள் குறித்த சொற்களும் செய்யுளில் கைகொடுக்குமளவுக்குச் சமூகவியற் சிந்தனைகளைத் தெளிவாகக் கூறவும் தொழில்நுட்பச் செய்திகளை நுணுக்கமாக எடுதுரைக்கவும் உதவுமென்று கூறமுடியாது.

சான்றோர் எழுதுவதைப் பின்பற்றப்படத்தக்க வழக்காகக் கொள்ளலாம் என்றால், தமிழ்ச் சான்றோர் நடைகளுக்குள்ளும் அடிப்படை ஒருமுகப்பாடு இல்லை. உதாரணமாக புணர்ச்சி விதிகள் கடைப்பிடிக்கப்படுமாற்றினை நோக்கலாம். பல சந்தர்ப்பங்களில் சரி பிழை கூறுவதே கஷ்டமாக இருக்கின்றதென்று ஆசிரியர் அங்கலாய்கின்றனர்.

எவ்வாறாயினும், மொழிவாயிலாகத் தொடர்புகொள்ளும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதே பிரச்சினையாகும். தொடர்பாட விழைபவர், அதற்கான அனுபவ வளமோ சிந்தனை வளமோ உள்ளவர்,

அதற்கேற்ற வழிமுறைகளை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புதிய சிந்தனைகள் ஊடுருவிப் பரவி, உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகி, அனுபவங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வேட்கை தோன்றுமிடத்து மொழியினைக் குறிப்பான நோக்கத்துடனும் தன்னபிக்கையுடன் கையாளும் நிலை உருவாகும். மேல்நாட்டு விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றங்களை, வேடிக்கை பார்ப்பதல்லால் ஊன் பதைத்தே அவைபோல் இயற்ற உணர்ச்சி கொள்வதும், மக்களை எட்டி அவர்களோடு தொடர்புகொள்ள வேண்டுமென்ற செயல்வேக உள்ளெழுச்சியும், மொழியாற்றலும் தொடர்பாடலும் சிறக்க உதவும். சமுதாய வாழ்க்கை ஒழுங்கை மாற்றியமைக்கும் ஆர்வத்துடன் எழுந்த சங்கமருவிய காலத்துத் தமிழிலக்கியங்கள் பல எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளத்தக்கன.

விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு வேகமாக வளர்ந்துவரும் இக்காலத்தில் இனத்துவ, பழம்பெருமை, பாதுகாப்பு, புலப்பெயர்ச்சி, அகதிநிலை ஆய்வுகளில் நாம் முடங்கிக்கிடப்பதும் விசனத்துக் குரியதேயாகும்.

*[நன்றி: "புது வசந்தம்" 2013,*
*தேசிய கலை இலக்கியப் பேரவையின் 40ம் ஆண்டு நிவைவுச் சிறப்பிதழ்]*

*****

# ஈழத்து இலக்கியமும் சமூக விடுதலையும்

*தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ*

**அறிமுகம்**

இன்றைய ஈழத்து இலக்கியச் சூழல், இலக்கிய நோக்கிலும் சமூக அசைவியக்கத்திலும் மாற்றங்களைக் கண்டிருக்கும் அதேவேளை, இலக்கியம் சமூக மாற்றத்திற்கான முக்கிய இயங்குதளமாக மாறியிருக்கிறது. குறிப்பாகப் போருக்குப் பிந்திய இலங்கைச் சூழலில், சமூகவிடுதலைக்கான இயங்குதளங்கள் செயற்படாத, செயற்பட இயலாதநிலையில், இலக்கியத்தின் பங்கு முக்கியமாகிறது. குறிப்பாக, மக்களுக்கான இலக்கியங்கள் எனும் அடிப்படையில், ஈழத்து இலக்கியம் இன்று புதிய திசைவழிகளை வேண்டுகிறது. ஏனெனில் உலகின் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் முக்கியமான போராட்டக் கருவியாக இலக்கியம் எப்போதும் இருந்திருக்கிறது; இப்போதும் இருக்கிறது.

பண்பாட்டு இடைவெளிக்குட் சிக்கிப் பண்பாட்டு மௌனம் பேணுவோராக எல்லோரும் வாழும் ஒரு சூழலில் புதிய திசைவழிகட்கான தேவையைப் பேசவேண்டியிருக்கிறது. அனைத்து அதிகாரங்களின் முன்னும் வாய்பேசா மௌனியாயிருந்து, அதிகாரம் தனது அடையாளத்தை நெருக்கடிக்கு உட்படுத்துகையில் இருட்டறைக்குள் இருந்து வெளிவந்த ஒருவரைப் போற் சமூகத்தை எதிர்கொள்ளும் மனநிலை பரவலாக உள்ள இச் சூழலில், மார்ட்டின் நெய்மோலரின் *"அவர்கள் என்னைத் தேடி வந்தபோது…"* எனத் தொடங்கும் கவிதை நினைவுக்கு வருகிறது. இந்நிலையில் மக்களையும் மக்களின் மனங்களையும் மீட்கப் புதிய வழிமுறைகள் தேவையாகின்றன. அதற்கான ஒரு முக்கிய கருவியாக இலக்கியம் அமைகிறது. இலக்கியம் மனிதர்களோடு ஊடாடுகிறபோதும், வாழ்க்கையும் இலக்கியமும் வெவ்வேறானவை. இப் புதிரான சமன்பாட்டைத் தம் இருப்பிலும் எழுத்திலும் ஏககாலத்திற் தீர்க்க

முயலும் பலருக்கு அது சமப்படாமற் போய்விடுகிறது. இரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டும் ஒன்றையொன்று வழிநடத்தியும் நகரும் அபாயமான விளையாட்டாகத் தொடர்கின்றன. ஆனால், இலக்கியம் மக்களுக்கானதாக மாறும்போது, இப் புதிரான சமன்பாடு எழுத்தாளனுக்கு வாய்ப்பது உண்மை.

சமூக மாற்றத்திற்கான இயங்குதளங்கள் விடாது மாறுகின்றன. இன்றைய உலகமயமாக்கற் சூழலில் மக்களை ஒன்றுதிரட்டும் வழிமுறைகள் அருகுகின்றன. புதிய வழிமுறைகளைத் தேடுவதும் புதிய இயங்குதளங்களை நோக்கிச் செல்வதும் இன்றைய தேவைகளாக உள்ளன. ஈழத்தின் இன்றைய சூழலில் பண்பாட்டுத் தளச் செயற்பாடும் மாற்றமும் முன்னெப்போதினும் முக்கியமாயுள்ளன. மக்களை ஒன்றுதிரட்டுவது கடினமாயும் சிக்கலாயும் மாறியுள்ள ஒரு சூழலிற் பண்பாட்டுத் தளச் செயற்பாடுகளே மக்களைச் சென்றடைய உகந்த வழிமுறைகளாயும் மக்களை ஒன்றுதிரட்ட உகந்த மூலோபாயங்களாயும் உள்ளன. இந்நிலையில், திட்டமிட்ட பண்பாட்டுத் தளச் செயற்பாடுகள் அவசியம். எச் செயற்பாடும் மக்களை எவ்வளவு தூரம் சென்றடைகிறது என்பதே அதன் வெற்றியைத் தீர்மானிக்கிறது. எனவே தெளிவாகவும் இலகுவாகவும் சென்றடையும் வழிவகைகளைத் தேடவேண்டும். அதனாற் தான் இலக்கியத்தின் பங்கும் பங்களிப்பும் பற்றிப் பேசவேண்டியுள்ளது. இலக்கியத்தைப் பற்றி மட்டுமன்றிச், சமூகத்தையும் நிகழ்நிலைகளையும் பற்றிய தெளிவையிட்டும் நடப்பன பற்றிய புரிதலையிட்டும் பேசவேண்டியுள்ளது. அப் புரிதல்களே சமூக விடுதலைக்கு இலக்கியங்கள் ஆற்றவேண்டிய பங்குபணிகளை உணர உதவும்.

## நெறிமுகம்

ஒரு சமூகத்தின் முக்கியமான அடையாளமாக மொழி இருக்கிறது. மொழியின் அழகியலையும் மொழியையுஞ் செழுமைப்படுத்துவனவாக இலக்கியங்கள் அமைவது வழமை. சமுதாய வளர்ச்சி மொழியைப் பாதிக்கிறது. சமுதாய வளர்ச்சியிலும் மாற்றத்திலும் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழி அதன் சமுதாய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கத் தவறும்போது தன் சாவை எதிர்நோக்குகிறது. மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் சமூக நடைமுறையே நிர்ணயிக்கிறது. இவ்வாறிருக்க, மொழி பற்றிய விறைப்பான பார்வைகள் ஒருபுறமும் பிறமொழிகளை கண்மூடித்தனமாகக் கலப்பது மறுபுறமுமாகப் பண்டிதர்களும் நவீனம் பேசுவோரும் மொழியின்

சாவை விரைவுபடுத்தி, மொழியைக் கழுவேற்றுகிறார்கள். இது தமிழுக்கு மிகப்பொருந்தும். ஆயினும், இங்கு சொல்ல வேண்டிய ஒரு விடயம் ஏதெனின், எந்த மொழியாலும் அதன் சமுதாயச் சூழலின் மாற்றங்கட்கு ஈடுகொடுக்க முடியும். அவ்வாறு ஈடுகொடுக்க இயலாமற் போகத் தேவையில்லை. ஏனெனிற் புதிய சமுதாயமும் அதனுடன் தொடர்பான புதிய சிந்தனைகளும் சமுதாயத்தின் உறுப்பினர்களாலேயே உருவாகின்றன. தேவைகளையொட்டி மொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிவர உள்வாங்குவதோடு தனது அடிப்படைகளையும் பேணுவதன் மூலம் மொழி வாழும்.

இது ஒருபுறமிருக்க, இலக்கியங்களை அரசியல்நீக்கித் தமது படைப்புகள் அரசியலற்றன எனப் படைப்பாளிகள் அறிவிப்பதும் ஒரு போக்காகியுள்ளது. குறிப்பாகப், போருக்குப் பிந்திய சூழலிற், தங்கள் படைப்புக்கள் அரசியலற்றன எனக் கூறும் அதேவேளை, அவை சமூகத்தைப் பிரதிபலிப்பதாகவும் சொல்கிறார்கள். எத்தகைய ஒரு முரண்நகை இது! உண்மையில் இது ஒரு நோய். தம்மை “அரசியல் கடந்த” படைப்பாளிகளாக்கும் ஒரு முயற்சியின் வெளிப்பாடே இது. பிரச்சனைகளும் இன்னல்களும் அடக்குமுறையும் நிறைந்த ஒரு சமூகத்தைப் பிரதிபலித்து இலக்கியம் படைப்பவர் அரசியலற்று இலக்கியம் படைக்கலாம் என்பது எவ்வளவு பெரிய பொய்யோ, அத்தகைய படைப்பு சாரமற்ற வெற்றுச்சரக்கு என்பது அதேயளவு மெய். இங்குதான், மக்கள் இலக்கியத்தின் தேவை பற்றியும் சமூக மாற்றத்தில் அதன் பங்கு பற்றியும் பேச வேண்டியிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகள் யாவற்றுக்கும் சாட்சியாயிருப்பவை பப்லோ நெருடாவின் கவிதைகள். நெருடாவின் கவிதையின் உள்ளாந்த கூறுகளில் ஒன்று அரசியல். தனது கவிதையில் இருந்து அரசியலைப் பிரிக்க விரும்புகிறவர்கள் கவிதையின் எதிரிகள் என்று நெருடா சொன்னார். மக்களுக்காகப் பாடியதால் நெருடா பிரசாரக் கவிஞன் என்று தூற்றப்பட்டார். மக்களுக்காகத் தொடர்ந்து எழுதுவதன் மூலம் அவர் மக்கள் கவிஞனாகத் தன்னை நிறுவி நிலைநிறுத்தினார். இவ்வாறு, சமூக அக்கறை என்பது படைப்பாளியின் அளவுகோலாகிறது.

மக்களுக்கான கலை இலக்கியங்கள் எனும்போது, மக்களைச் சென்றடையும் பண்பு முக்கியமாகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கும் விடுதலைக்குமான ஆக்கங்களை, மக்கள் பரவலாக வரவேற்கும் கலை-இலக்கிய வடிவங்களில் வழங்குவதும்

மக்களை நேரடியாக ஈடுபடுத்தக்கூடிய கலை-இலக்கிய வடிவங்களை ஊக்குவிப்பதும் மக்கள் சார்ந்த முக்கிய இலக்கியப் பணிகள். எவரும் விளங்கற்கரிய, வலிந்து கடினமாக்கிய படைப்புக்களை உயர்வாகவும் தெளிவும் எளிமையுங் கொண்டவற்றைத் தாழ்வாகவும் எண்ணி மயங்கும் போக்கு சில புத்திஜீவிகளின் சிந்தனைகளில் இறுகிக் கிடக்கிறது. மக்களுக்கு எட்டாதவை மக்களுக்கான இலக்கியங்க ளாகா. இப் பின்னணியில் இன்றைய சூழலின் சில அம்சங்களைக் கருத்திற்கொள்வது கலை இலக்கியத்தின் தேவையையும் புதிய இயங்குதளங்களின் அவசியத்தையும் விளங்க உதவும்.

- வன்முறைசாரா இயக்கங்கள் எல்லா ஜனநாயக நிறுவனங்களின் கதவுகளையும் பல ஆண்டுகளாகத் தட்டியவாறு இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் அவை வெறுப்புடன் நிராகரிக்கவும் அவமதிக்கவும் படுகின்றன. ஆயினும் அகிம்சை பற்றித் தொடர்ந்து பேசப்படுகிறது. மக்கள், தவிர்க்கவியலாது, தங்கள் போராட்ட உத்திகளை மாற்றிக்கொள்ள விரும்புவார்கள். மக்களின் முன் வேறு தெரிவுகட்கு இடமில்லாமற் செய்யப்பட்டிருக்கிறது. அகிம்சையைப் போதிப்போர், கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விலக்கி, உடனடி நிகழ்வுகளின் மீதும் நிகழ்காலத்தின் மீதுமே கவனங் குவிக்கிறார்கள். இது பிழையானது மட்டுமன்றி மோசடியானதுமாகும். தகவற் தொடர்பு, சந்தை எனும் இரு புதிய சூத்திரங்கள் அடையாளப்படுத்தும் ஒரு யுகத்தில், "நவீனமாக இருப்பது" என்பது "தகவமைத்துக் கொள்வது அல்லது அடிபணிவது" என்ற ஒற்றை விதிக்குக் கீழ்ப்படிவதேயாகும் என அவர்கள் சொல்கிறார்கள். இன்றைய உலகப் பொருளாதாரத்தில், வெகுசன ஊடக நிறுவனங்கள் மிகப் பெரிய நிறுவனங்களாக இருக்கின்றன. சமூகம் எப்படி இருக்கிறது என்பதை அல்லாது, அது எப்படி இருக்க வேண்டும் எனக் காட்டும் மிகப் பெரிய கண்ணாடியை அவை கொண்டுள்ளன. தகவல் "திரட்டும்" பல்தேசியக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன ஊடங்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட இந்த யுகத்தில் அகிம்சைப் போராட்டம் சாத்தியமா என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுகிறது.

- உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர் அரியேல் டோர்Fமன் கேட்டதை நினைவுகூரல் தகும். "சித்திரவதைப்பட்டோரும் சித்திரவதையாளர் களும் எவ்வாறு ஒரே இடத்திற் சமாதானமாக வாழமுடியும்?

ஒடுக்குமுறையாற் பீதியுண்ட ஒரு நாட்டில் இன்றளவும் வெளிப்படையாகப் பேசுதற்குப் பயம் எங்கெங்கும் நிறைந்திருக் கையில், அந்த நாட்டை எவ்வாறு வேதனையிலிருந்து மீட்க முடியும்? பொய்யே வழமையாகிவிட்டபோது உண்மையை எட்டுவது எப்படி? நாம் வரலாற்றின் கைதிகளாகாமல் எதிர் காலத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பது எப்படி? வருங்காலத்திலும் இவை நேரலாம் எனக் கருதாமல் அதை முற்றாக மறுத்தல் எவ்வாறு இயலும்? சமாதானத்தை உறுதிசெய்ய உண்மைகளைத் தியாகம் செய்ய வேண்டுமா? கடந்த காலத்தை நாம் மறுக்கும் போதும் நிராகரிக்கும் போதும், உண்மை நம்மிடம் வந்து முணுமுணுக்கையிலும் கதறுகையிலும் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்? எல்லாவற்றையும் விட மிகப் பெரிய மனவேதனை ஏதெனில், தேசத்தில் ஜனநாயக நிலையை உருவாக்கும் மனோநிலையை அழித்துவிடாமல் இவ்விடயங்களை நாம் எதிர்கொள்வது எவ்வாறு?"

- ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு மதவாத ஃபாசிசத்தை அடைய மதம் எப்போதும் முயலும். அவ்வாறான ஒரு நிலையை மதம் எட்டும் பட்சத்தில் மதச்சார்பான சட்டமூலங்களை நிறைவேற்றுவதும் எனைய மதங்களையும் நம்பிக்கைகளையும் தடுப்பதும் போன்ற முயற்சிகள் முழுவீச்சுடன் மேற்கொள்ளப்படும். ஆயினும், அப்போதும் ஜனநாயகமும் மதச்சார்பின்மையும் மறுக்கப்படாதது போல ஒரு தோற்றம் காட்டப்பட்டபடும். மதச்சார்பற்ற சக்திகள் தமக்குள் அணிதிரளாவிடின் மேற்சொன்ன அபாயங்கள் நிகழுங் காலம் தொலைவில் இல்லை. உடனடியான வெளிப்படையான விவாதம் ஒன்றே இம் முன்முயற்சிகட்கான உடனடித் தேவை. அது மதச்சார்பற்ற சக்திகள் என்பவற்றுடன் நின்றுவிடலாகாது. அதற்கப்பாலான நேச சக்திகளை ஒருங்கிணைத்து ஒன்றுசேர்கும் ஒரு பணி எம்முன் உள்ளது. ஏனெனில் மதச்சார்பின்மை எவ்வளவு பலவீனமானது என்பதைக் கடந்த காலம் தெளிவாகக் காட்டியுள்ளது.
- மதவாதச் சக்திகள் கலாசார மற்றும் சமூகத் துறைகளுட் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. இது மிக ஆபத்தானது. மதவாதிகள் பண்பாட்டையும் சமூகத்தையும் மதத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கின்றனர். இதனாலேயே பெரும்பான்மையோர் மதச் சார்பற்று இருந்தாலும், மதவாதச் சக்திகள் வெல்லக் கூடியதாக இருக்கிறது. இது அபாயகரமானது. மதமும் பண்பாடும்

வேறுபாடற்றவை, இரண்டும் அடிப்படையில் ஒன்றே என்ற தோற்ற மயக்கத்தை உருவாக்குவது மதவாதிகளின் இன்றைய தந்திரமாக உள்ளது. மேலும், மதவாத அரசியலுள் மக்களை அணி திரட்டுவதும் இங்கு நிகழ்கிறது. உலக வரலாற்றில் மத, பண்பாட்டு முன்னேற்றங்கள் சமுதாய முன்னேற்றத்தோடு பின்னிப் பிணைந்தே இருந்து வந்துள்ளன. அதைக்கொண்டு பண்பாட்டு ஒருமைப்பாட்டுக்கு மத முலாம் பூசும் செயல்கள் நடந்தேறு கின்றன. அதனாலேயே "பிரிக்க முடியாத அணுக் கூறுகளின் உருமாற்றம்" என அதை அந்தோனியோ கிராம்ஷி குறிக்கிறார்.

- மதச் சார்பின்மைச் செயற்பாடுகளும் ஜனநாயகத்திற்கான போராட்டமும் ஒன்றோடொன்று தொடர்பில்லாதனபோற் தெரியலாம். ஆனால் அது உண்மையல்ல. மனித உரிமைக்காகப் போராடும் அனைவரும் மதச் சார்பின்மைக்காகப் போராடுகிறார்கள். ஜனநாயகத்தின் அவசியத்தை வலியுறுத்தும் அனைவரும் மதச்சார்பின்மையின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்கள். மதவாதத்திற்கெதிரான போராட்டம் பிரசாரத்துடன் நிற்கமுடியாது. அது பண்பாட்டு அணிதிரட்டலை நோக்கி நகரவேண்டும். பண்பாட்டு அணிதிரட்டலே மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை முன்னெடுக்கச் சிறந்த வழிமுறையாகும். மத நம்பிக்கைகளில் ஊறியுள்ள சமூகத்தை மீட்டெடுக்கச் சிறந்த மூலோபாயம் பண்பாட்டு அணிதிரட்டலே.

இப் பின்னணியிலேயே ஈழத்து இலக்கியத்தின் அவசியத்தையும் புதிய இயங்குதளங்கட்கான வழித்தடங்களையும் தேடவேண்டும். குறிப்பாகச் சமூக விடுதலையை அடையும் பாதையில் இலக்கியத்தின் பணி தவிர்க்கவியலாதது என்பதுடன் அடையாளங்களைத் தாண்டி மனிதர்களை ஒன்றிணைக்கும் பணியை இலக்கியங்கள் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறான இலக்கியங்கள் எதிர்ப்புக்கட்கும் முத்திரை குத்தல்கட்கும் உட்படுகின்றன. சமுதாய உணர்வுக்கோ மனித இன மேம்பாட்டுக்கோ, மனித சமத்துவத்துக்கோ போராடும் குரல்கள் செவ்வியற் கலைகளிலிருந்து மட்டுமன்றி, உன்னதமானவை என்று கொண்டாடப்படும் அண்மைக்காலப் படைப்புக்களினின்றும் கவனமாகக் களையப்படுகின்றன.

அடக்குமுறையும் சுரண்டலும் உள்ள வரை, எதிர்ப்பும் போராட்டமும் இருக்கும். எதிர்ப்பும் போராட்டமும் கலை இலக்கிய வடிவங்கள் ஊடாகவும் எப்போதும் தம்மை வரலாற்றில் வெளிப்படுத்தி

வந்துள்ளன. போராட்ட இலக்கியம் என்பது எதிர்ப்பு இலக்கியத்தின் வளர்ச்சி பெற்ற வெளிவெளியான வடிவம். அது தெளிவான போராட்ட இலக்குகளை உடையது. போராட்டத்திற்கான வழியைக் காட்டுவது.

இலக்கியத்தை விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்ற ஒரு வலுவான கருவியாக்குவது எவ்வாறு என்ற கேள்வியின் அடிப்படையில் இலக்கியத்தை அணுகும்போது, நமக்குச் சில தீர்வுகள் கிட்டுகின்றன. வெளிவெளியாகவே இவ்வாறான உணர்வுபூர்வமான நோக்கின்றிப் படைக்கப்படும் சமூகச்சார்பானதும் மக்களது நலன் சார்ந்ததுமான ஆக்கங்களுடன் இத் தீர்வுகள் முரண்பட அவசியமில்லை. ஏனெனில் ஒவ்வொரு படைப்பாளியினதும் சமூகப் பார்வை அவரது ஆக்கங்களிற் தன் முத்திரையைப் பதித்திருக்கும். எனின், விடுதலைப் போராட்ட இலக்குடைய ஒரு மக்கள் இலக்கியக் கோட்பாட்டுக்கெனச் சிறப்பான ஒரு அணுகுமுறை தேவையா என்ற கேள்வி எழுகிறது.

மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களைக் கிளர்ந்து போராடத் தூண்டும் இலக்கியம், மக்களால் ஆக்கப்படும் மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று சொல்லலாம். எனவே, மக்கள் இலக்கியத்திற்கு அவசியமான பண்பு அத்தகைய இலக்கியம் மக்களிடமிருந்து அந்நியப்படாமையே. மக்களை விடத் தன்னை உயர்வாகக் கருதுகிற படைப்பாளி மக்கள் இலக்கியம் படைப்பது கடினம். ஏனெனில் அவருடைய கருத்தில், மக்கள் அவரையொத்த படைப்புத்திறன் அற்றவர்களாக மட்டுமன்றி, அவருடைய படைப்பைச் சரிவர உணரும் திறனற்றவர்களாகவும் இருப்பர். எனவே மக்களுள் மக்களாகத் தம்மை உணர்வோர் மக்களுக்கான இலக்கியங்களைப் படைப்பது தேவையாகின்றது.

**நிறைமுகம்**

இங்கு நாம் பேசுகிற சமூக விடுதலை, தமிழ் மக்களைப் பொறுத்தவரை, கைக்கெட்டாத் தொலைவில் இருப்பது போன்ற தோற்றத்தைத் தரும் நிகழ்வுகள் நடக்கின்றன. கடந்த முப்பதாண்டுகளுள் இலங்கையின் தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையே கர்நாடக இசை, பரத நாட்டியம் போன்ற துறைகளில் அக்கறை பெரிதும் வளர்ந்துள்ளது. பல லட்சங்கள் செலவில், அரங்கேற்றங்கள் ஆடம்பரமாக நடைபெறுகின்றன. இசையும் நடனமும் பற்றிய ஈடுபாட்டை விடப் போட்டி, அந்தஸ்து மனோபாவங்களே அவற்றை

இயக்குஞ் சக்திகளாக இருந்துவந்துள்ளன. அவை சமூக விடுதலையை வேண்டும் மக்கள்திரளுக்கான நற்குணங்களல்ல.

கிராமச் சூழலிலிருந்து புலம் பெயர்த்து என்.ஜி.ஓக்களாலும் அரச நிறுவனங்களாலும் நகரங்களில் மேடையேறுகிற கிராமியக் கலைகளும் தமது இடப்பெயர்வுடன் சேர்ந்து தமது சமூக அடையாளத்தையும் சமூகப் பணியையும் இழந்து பண்பாட்டு வணிகத்தின் பகுதியாகி விடுகின்றன. எனினும் நம் முன்னே ஒருபுறம் நவீனத்துவத்தின் பேரால் ஒரு வகையான இசை, நாட்டிய மரபுகள் ஒரு கும்பற் கலாச்சாரமாக வளர்க்கப்படுகின்றன. அவற்றில் இளையோர் திரள்திரளாகப் பங்குபற்றினாலும் அவை எவ்விதமான சமூக நோக்கும் பார்வையும் அற்று இளைய தலைமுறையினரைச் சீரழிவுப் பாதையிலே இட்டுச்செல்ல முனைகின்றன. இன்னொருபுறம், மரபின் பேரால் சமூகத்துடன் எவ்விதமான ஒட்டும் உறவும் அற்று மேடைக் கவர்ச்சியுடன் சேர்த்து ஒரு பாரம்பரிய இசையும் நடனமும் நமக்குப் பரிமாறப்படுகின்றன. அதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த கலைஞர்களின் விருத்திக்கு —முக்கியமாகச் சமூக உணர்வுடைய கலைப் படைப்புகளின் உருவாக்கத்திற்கு— நன்மையில்லை என்பதுடன், அவை பாதகமான சமூக விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

சமூக விடுதலை என்பது பண்பாட்டு விடுதலையும் ஆகும் என்பதை நினைவில் கொள்ளல் தகும். ஏனெனில் ஒன்றில்லாமல் மற்றது இல்லை. படைப்பாளிகள் இதை நினைவிற் கொள்ள வேண்டும். புதிய பண்பாட்டை உருவாக்குவம் பணியில் இலக்கியம் முன்னிற்க வேண்டும். அப்போதுதான், பண்பாட்டுச் சீரழிவிலிருந்து சமூகங்களை மீட்டுருவாக்க முடியும். அவ்வாறு மீட்டுருவாக்கிய சமூகங்களே சமூக விடுதலைக்கான போராட்டத்தில் முக்கிய பங்காற்றுவன. அவ் வகையில், இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியம் முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறது எனவும் சமூக விடுதலைக்கான முன்நிபந்தனைகளில் ஒன்றாக மக்கள் இலக்கியங்களின் தேவை உணரப்படுகிறது எனவும் உறுதியாகச் சொல்லலாம்.

*(நன்றி: நல்லதிபருக்கான விதப்புரை, கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திருமதி இந்திரா இராஜரட்னம் அவர்களின் மணிவிழாவையொட்டிய சேவை விதப்புரை, 2013, ப. 70-75)*

*****

# பண்பாடு

*ச. சுதாகர்*

அன்னையின் மடியினில் பாலினைக் குடிக்கையில்
ஊட்டி வளர்த்ததப் பண்பாடு
தந்தையின் தோளில் ஆடி வளர்கையில் ஊட்டி வளர்த்ததப் பண்பாடு

பகைமையைப் பாழ்மையை சாதியத் தீமையை
பகர்ந்து வளர்த்ததப் பண்பாடு
அடிமையின் மோகத்தை ஆழ்ந்து நம் மனத்தில்
ஆக்கி வைத்ததப் பண்பாடு

அப்பு சாமிக்கு அடங்கிடல் வேணும்
ஐயர் சாமிக்கு படிந்திடல் வேணும்
அடுத்த சாதியை அணைத்திடல் கூடா
அடுத்தவர் நலத்தினில் அக்கறை கூடா

மேட்டிமை சாதியில் பிறந்தவன் உனக்கு
வேற்று சாதியில் காதலும் கூடா

பாட்டன் முப்பாட்டனின் முதுசொம் ஈதென்று
முதுகினில் சுமந்த மூட்டை எம் பண்பாடு

பழைமையின் வேராய் படர்ந்த பண்பாடு
கலாச் சாரத்தை காட்டிக் கவிழ்த்த பண்பாடு
புதுமையின் பெயரால் புகுந்த சிறுமையை
புது அமுதெனவே குடித்த பண்பாடு
புளித்த கள் எனவே புதுமை நாறிட
அதனையும் தன்னுடன் கோர்த்த பண்பாடு

நாளுக்கு நாள் உரு மாறும் பண்பாடு
நமதென உமதென பிரிக்கும் பண்பாடு

நாட்டினில் தாலியால் குடும்பம் பண்பாடு
கரை தாண்டினால் கூட வாழ்தல் பண்பாடு

வெள்ளையன் வருகையில் வெற்று மேலுடல் பண்பாடு

பின்னை நாள் முழு உடல் மூடல் பண்பாடின்று
மூடிய ஆடைகள் குறைதல் பண்பாடு

நாளுக்கு நாள் உரு மாறும் பண்பாடு
நாட்பட்ட பழைமையை சுமக்கும் பண்பாடு
சாதிய தீமையை விதைக்கும் பண்பாடு
பெண்டிரை அடிமையாய் நடத்தும் பண்பாடு
மதத்தினை போதையாய் ஏற்றும் பண்பாடு
மனிதரை பேய்களாய் ஆக்கும் பண்பாடு

ஆயிரம் ஆண்டினில் ஓடிய வேர்களை தேடனும் நம் தோழா
அதில் விஷமெது வித்தெது அமுதெது என்று தெரியணும் நம் தோழா

விஷ வேர்களை வெட்டி வீணினில் வளர்ந்ததைச்
சாய்க்கணும் நம் தோழா
சாய்ந்த அம் மரத்தையும் வேட்டிய வேரையும்
சுட்டெரிக்கணும் நம் தோழா

சுட்ட சாம்பலின் சுடர்மிக எழுமே புது பண்பாடொன்று நம் தோழா
அது சுடர்ந்திடும் வாழ்வினைச் சூரியஒளியினை தந்திடும் நம் தோழா

மனிதரை மனிதராய் மனிதர்கள் மதிக்கும்
வகையினைத் தரும் புதுப் பண்பாடு
பழமைகள் களைந்து புதுமைகள் புகுத்தி
புதிதென எழும் புதுப் பண்பாடு

நீயென நான் எனப் பிரிந்தவர் கூடி உயிர்த்தெழுந்திடும்
அது புதுப் பண்பாடு

எமதினி எமதினி உலகென எழுந்து புகழ்மிக ஓங்கிடும் புதுப் பண்பாடு
புதியதோர் மனிதனை புதியதோர் நீதியை
புறப்படச் செய்யுமப் பண்பாடு

மனிதரை மனிதராய் மனிதர்கள் மதிக்கும் வகையினைத்
தரும் புதுப் பண்பாடு

***(31.1.2012 அன்று கொழும்பில் சமூக விஞ்ஞானக் கல்வி வட்டத்தின் "பாடிப்பறை" நிகழ்ச்சித் தொடரின் ஆண்டு நிறைவு நிகழ்வின் கவியரங்கிற் பாடிய கவிதை)***

# செம்பதாகை – 17

Epitaph for a Palestinian Child
by Michael Ray Burch

I lived as best I could, and then I died.
Be careful where you step: the grave is wide

مرثية لطفل فلسطيني

عشت قدر استطاعتي، وبعدها متّ

إحذر أين تخطّو: فالقبر واسع

*[ஆங்கிலத்திலிருந்து அரபுக்கு: இக்பால் தமிமி (Iqbal Tamimi)]*

ஒரு பலஸ்தீனக் குழந்தைக்கான கல்லறை வாசகம்
***மைக்கல் றே ஜேச்***
என்னால் வாழ இயன்றளவு நன்றாக வாழ்ந்து இறந்தேன்
கவனமாகக் காலடி வையுங்கள்: புதைகுழி அகலமானது
*[ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு: சி. சிவசேகரம்]*

***1958 பெப்ரவரியிற் பிறந்த மைக்கல் றே ஜேச், ரெனஸி (Tennessee) மாநிலத்தில் நஷ்வில் (Nashville) நகரில் வாழும் ஒரு அமெரிக்கப் படைப்பாளியாவர்.***

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***